உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

e-magazine

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

மலர்-6 இதழ்-163

ஜூன் 16-30 2023

விருப்ப சந்தா செலுத்த ஸ்கேன் செய்யவும்



ஜெயந்திக் கெல்லாம் உயர்ந்த ஜெயந்தி

தியான யோகத்தின் மூலம் அண்ட சராசர ஆராய்ச்சியில் ஈடுபட்ட சித்தர்கள், வள்ளலார்

12 விநாடிகள் ஆயுளை அதிகரிக்க வைக்கும் சிகண்டி மணி ஓசை

e-magazine
www.aanmeegamalar.com
e-magazine

# விபூதியை மூன்று பட்டையாக இடுவதின் காரணம்



### முதல் பட்டை

அகாரம், கார்ஹபத்யம், ரிக் வேதம், பூலோகம், ரஜோகுணம், ஆத்மா, க்ரியாசக்தி, அதி காலை மந்திரத்தின் தேவதை மஹாதேவன் ஆகியவை அடங்கியது.


### இரண்டாவது பட்டை

உகாரம், தக்ஷிணாக்னி, ஆகாயம், யஜுர்வேதம், சத்வகுணம், பகல்நேர மந்திரதேவதை இச்சா சக்தி, அந்தராத்மா, மகேஸ்வரன் ஆகியோர் இதில் உள்ளனர்.

### மூன்றாவது பட்டை

மகாரம், ஆஹவனீயம், பரமாத்மா, தமோகுணம், சுவர்க்கம், ஞானசக்தி, ஸாமவேதம், மாலை நேர மந்திர தேவதை, சிவன் ஆகியோர் இதில் உள்ளனர்.

# முழுமனிதனாக உருவாக...



கண்கள் ஆசையை வளர்க்கிறது, ஆசை காமத்தை வளர்க்கின்றது; காமம் பாவத்தை வளர்க்கின்றது; பாவம் நரகத்தை வளர்க்கின்றது; நரகம் வலியை வளர்க்கின்றது; வலி அழுகையை வளர்க்கின்றது;

அழுகை ஞானத்தை வளர்க்கின்றது;

ஞானம் இன்னொரு ஜென்மத்தை வெறுக்கிறது...

ஆசைக்கு அடிபணிய அடியோடு மறுக்கிறது..

அப்போது இவ்வுலகம் முழு மனிதனை பார்க்கிறது..

# ஜெயந்திக்கெல்லாம் உயர்ந்த ஜெயந்தி



ஆஞ்சநேயரை வழிபட்டால்

ராமாயணத்தில் ஒவ்வொருவரும் ஒரு வேடம் ஏற்றனர்.

அதில் மகாவிஷ்ணு ராமனாகவும்,

மகாலட்சுமி சீதாதேவியாகவும்,

ஆதிசேஷன் லட்சுமணனாகவும் பாத்திரமேற்றனர்.

இந்த ராமாயணத்தில் பங்குபெற எல்லாம் வல்ல சிவனுக்கும் ஆசை ஏற்பட்டது. அத்துடன் மகாவிஷ்ணுவுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணமும் இருந்து வந்தது.

இதனால் சிவபெருமான் ஆஞ்சநேயராக அவதரித்து ராமாயணத்தில் ராமருக்கு சேவை செய்தார் இதனால்தான் ஆஞ்சநேயரை வழிபட்டால் சிவனையும் பெருமாளையும் சேர்த்து வழிபட்ட புண்ணியம் கிடைக்கும்.

ஆஞ்சநேயனின் ஜெயந்தி, ஜெயந்திக்கெல்லாம் ஜெயந்தி. அந்த ஜெயந்தியை நாம் கொண்டாடுவதால் நமக்கு சகல மங்கலங்களும் உண்டாகும். நினைத்த காரியம் கைகூடும்.

துன்பம் விலகும்; குடும்பத்தில் இன்பம் பெருகும். ஆஞ்சநேயரை ராம நாமத்தால் சேவிப்பதோடு, வடைமாலைசாத்தி, வெற்றிலை மாலை அணிவித்து, வெண்ணெய் சாத்தி, ஆராதிக்க வேண்டும்.

## உடல் பாகங்களை காக்கும்

# பீஜ மந்திரங்கள்



நவக்கிரகங்களுக்கு பீஜ மந்திரங்கள் உண்டு. அந்த ஒவ்வொரு பீஜ ஒலியும் மனதர்களின் உடல் பாகங்கள் ஒவ்வொன்றிற்கும் வலு சேர்ப்பதாகவும், அந்தந்த உடல் பாகங்கள் வலுப்பெறவும் உதவுவதாகவும் உள்ளது.

| | |
|---|---|
| சூரியன் | க்ரீம் (Krim) |
| சந்திரன் | ரீம் (Rim) |
| செவ்வாய் | ஹ்ரீம் (Hrim) |
| புதன் | ஸ் ரீம் (Srim) |
| வியாழன் | ஔம் (Houm) |
| வெள்ளி | கிலீம் (Klim) |
| சனி | ஐம் (Aim) |
| ராகு | ஹ்ரௌம் (Hraum) |
| கேது | சௌம் (Soum) |

www.aanmeegamalar.com

வடமொழி எழுத்துக்களில் ஒவ்வொரு உயிரெழுத்தும் தனித்தனியே எல்லா மெய்யெழுத்துக்களுடன் கூடினால் எத்தனை சப்தங்கள் உண்டோ அத்தனை பீஜ மந்திரங்கள் இருக்கின்றன.

ஒவ்வொரு எழுத்தை உச்சரிப்பதால் ஒரு குறிப்பிட்ட வேகமுள்ள சலனம் உண்டாகி உடலின் பாகங்களில் ஒரு குறிப்பிட்ட பாகத்தைப் பாதிக்கின்றது. எடுத்துக்காட்டாக, ஓம், ஹ்ராம் (Hram) ஹ்ரீம் (Hrim) ஹ்ரூம் (Hrum) ஹ்ரைம் (Hraim) ஹ்ரௌம் (Hraum) ஹ்ர (Hra) என்ற பீஜ மந்திரங்களைப் பார்ப்போம்.

“ஓம்” வெட்ட வெளியில் பிறந்த முதல் ஒலி. இதுவே மற்ற சப்தங்கள் அனைத்துக்கும் தாய் – ஒலியின் பிறப்பிடம் இதுவே. இப்பிரணவம் உலகத்தின் உள் தத்துவத்தைத் தன்னுள்ளே அடக்கியிருக்கிறது.

“ஹ”(Rha): என்ற ஒலி இருதயப் பகுதியில் ஏற்படும் சலனத்தால் உண்டாவதால் இருதயத்திற்குப் பலத்தைக் கொடுத்து அதிக ரத்த ஓட்டத்தை உண்டாக்குகிறது.

“ர”(Ra): என்ற ஒலி நாக்கின் நுனியால்

நாக்கின் மேல் அண்ணத்தின் முன் பாகத்தைத் தொடுவதால்தான் ஏற்படுகின்றது. இந்த "ர்" சப்தத்தினால் நாக்கு நுனியில் உள்ள நரம்பு முனைகள் மூலமாய் மூளையில் சலனத்தை ஏற்படுத்துகின்றன.

"ம்": வாயை மூடிக் காற்றை வயிற்றிலிருந்து மூக்கு வழியாக வெளியிடுவதால் உண்டாகும் சப்தம். இது மூச்சுக் குழாயையும் மூக்குத் துவா ரங்களையும் சுத்தப்படுத்துகிறது.

ஹ்ராம் (Hram): இதிலுள்ள "ஆ" என்னும்உயி ரெழுத்து விலா எலும்புகளை எழுப்பி உணவுக் குழாயைச் சுத்தப்படுத்துகிறது. இதன்சலனம் அனாகத சக்கரமாகிய இருதயத்தின் அருகிலி ருந்து எழும்புகிறது.

ஹ்ரீம் (Hrim): ஈ என்ற உயிரெழுத்தை உச்ச ரிப்பதால் கழுத்துப் பகுதியில் உள்ள சக்தி கேந் திரமான விசுத்தி சக்கரத்தில் சலனம் உண் டாகிறது. ஆதலால் இது தொண்டை, மூக்கு, வாய் முதலிய அவயவங்களுக்கு நன்மை பயக் கிறது. இதன் சக்தி கீழேயும் பரவி சுவாச உறுப்புக்களையும் ஜீரண உறுப்புக்களையும் சுத்தப்படுத்துகிறது.

ஹ்ரூம் (Hrum): "ஊ" வின் சலனம் நாபிப் பகுதியில் உள்ள மணிபூரகச் சக்கரத்தில் எழும்புவதால் ஈரல், குலை முதலிய உறுப்புக்களை ஊக்குவித்து சரிகின்ற தொந்தியையும் கரைக்க உதவுகிறது.


ஹ்ரைம் (Hraim): "ஐ" சப்தம் தொப்புளுக்குக் கீழேயுள்ள சுவாதிட்டான சக்கரத்தில் சலன அலைகளை எழுப்புகிறது. இச் சலனம் சிறுநீரக உறுப்புகட்குப் புத்துணர்ச்சி அளித்து சிறுநீர் சுரப்பதை ஒழுங்கானதாகவும் சரியானதாகவும் செய்கிறது.

ஹ்ரௌம் (Hraum): "ஔி" – மூலாதார சக்தியால் எழுப்பப்படும் சலன அலைகளால் ஆனது. ஆதலால் அச்சக்கரத்திலிருந்து பிரியும் நரம்புகளால் வியாபிக்கப்பட்டிருக்கும் ஆசனம் முதலிய கீழ் உறுப்புக்களை வலுப்படுத்துகிறது.

ஹ்ர (Hra): இதில் "அ" இருப்பதால் ஹ்ராம் என்ற பீஜத்தை ஒத்திருக்கின்றது. ஆதலால் இது இதயப் பகுதியான அனாகத சக்கரத்தைச் சலனப்படுத்துவதுடன் இல்லாமல் அடியில் மூலா தாரத்திலிருந்து உச்சியிலுள்ள சகஸ்ராரம் வரை ஏழு கேந்திரங்களிலும் சரியான சலனத்தை எழுப்பி உடலின் எல்லா அவயவங்களையும் ஊக்குவிக்கிறது.

சாணக்கிய நீதி-27

# நல்ல மனிதர்களை அடையாளம் காணுங்கள்




தங்கம் மண்ணில் விழுந்து கிடந்தாலும் கூட அது தன்னுடைய மதிப்பை ஒரு போதும் இழப்பதில்லை.

ஏன்? ஏனென்றால், அதன் மதிப்புவெளித் தோற்றத்தால் உண்டானதல்ல. இது உண்மை யிலேயே உருவாக்கப்பட்டிருக்கும் தாதுக்களின் குணத்தால் உருவானது.

அதேபோலத்தான், ஒரு மனிதன் இருக்கும் சூழலல்ல, அவனுடைய குணம்தான் அவனு டைய உண்மையான சொத்தாக இருக்கிறது.

ஆகவே, தங்கத்தை அடையாளம் காணக் கற்றுக்கொள்ளுங்கள். ஒருவேளை, நீங்கள் அது மண்ணில் விழுந்து கிடக்கிறது என்று கண்டும் காணாமல் சென்றுவிடப் போகிறீர்கள்.

பிறகு அது வேறு ஒருவருக்கு சென்றுவிடும். அதன் சக்தியால் அவன் வலிமை மிகுந்தவன் ஆகிவிடுவான்.



# 12 விநாடிகள் ஆயுளை அதிகரிக்க வைக்கும் சிகண்டி மணி ஓசை



பொதுவாக அனைத்து கோவில்களிலும் பூஜையின் போது மணி ஓசை ஒலிக்கும், அந்த மணி ஓசையிலும் ஒருசிறப்பை பெற்ற ஒரு மணி நமது சிதம்பரத்தில் உள்ளது. உலகிலேயே மிகச் சிறந்த மணியாகவும் அது திகழ்வது குறிப்பிடத்தக்கது.

கோயில்களிலும் சரி, அமைப்பிலும் சரி பல்வேறு சிறப்புகளைப் பெற்ற சிதம்பத்தில் அமைக் கப்பட்டுள்ள ஆலயமணியே உலகில் உள்ள மிகச் சிறந்த மணியாகவும் போற்றப்படுகிறது.

சித்தர்களால் சிகண்டி பூரணம் என்று அழைக்கப்படும் இந்த மணியிலிருந்து எழும் தெய்வீக ஒலி எளிதில் நம்மை ஆழ்நிலை தியா னத்தில் ஆழ்த்தி விடும் தன்மை உடையது.

தியானத்தில் முன்னேற்றம் அடைய விரும்பு பவர்கள் இந்த சிகண்டி பூரண மணி ஓசையைத் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருத்தல் தியானம் சித்திக்கும்.

வள்ளலார் பெருமானுக்கு அருள் வழங்கி அனுகிரகம் அளித்த மணியே தில்லை சிதம்பர தலத்தில் விளங்கும் சிகண்டி பூர்ணம் என்ற ஆலய மணியாகும்.

உலகிலேயே சிறந்த ஆலய மணி, இதற்கு இணையான மணி உலகத்தில் வேறெங்கும் கிடையாது.

சீவனைச் சிவமாக்கும் ஒப்பற்ற இறைச் சக்தியுடன் பூரிக்கும் மணியாகத் திகழ்வது சிகண்டி பூர்ணமாகும்.

இதன் மகத்துவத்தை வார்த்தைகளால் வர் ணிக்க இயலாது. அவரவர் ஆன்ம அனுபவத் தால் மட்டுமே உணர முடியும். தில்லைக்கு சென்று நடராஜரை வணங்கும்போது அவசியம் இந்த சிகண்டி மணி ஓசையை அவசியம் கேளுங்கள்.

இந்த மணிக்கு இன்னுமொரு சிறப்பு உள்ளது.

59 நொடி ஒலிக்கும் இந்த சிகண்டி பூரண மணி சத்தத்தைக் (தேவகானத்தைக்) கேட்டால் உங்கள் ஆயுளில் 12 விநாடிகள் அதிகமாகும்.

www.aanmeegamalar.com



# இந்தப் பிறவியில் நீங்கள் எந்தப் பிறவி நீங்கள்

மாமுனிவர் அகத்தியர் பெருமான் கர்ம காண்டம் நூலில் கூறியது....

| | |
|---|---|
| கடவுள் மனிதனாகப் பிறப்பது | 1 |
| மனிதன் மனிதனாகப் பிறப்பது | 2 |
| மிருகம் மனிதனாகப் பிறப்பது | 3 |
| பறவைகள் மனிதனாகப் பிறப்பது | 4 |
| நீர் வாழ்வன மனிதனாக பிறப்பது | 5 |
| பூச்சிபுளு மனிதனாகப் பிறப்பது | 6 |
| மரம்செடிகள் மனிதனாகப் பிறப்பது | 7 |

இப்படியாக மனிதப்பிறவிகள் ஏழுவகையாக பிரிக்கப்பட்டு அப்பிறவிகளில் செய்யக்கூடிய பாவ பபுண்ணியங்களுக்கு ஏற்ப மாறிமாறி பிறந் தும் இறந்தும் வாழ்கின்றோம்....

1. கடவுள் மனிதனாகப் பிறந்தால் நீதிகளையும் தர்மங்களையும் போதித்து, ஆலயங்களை எழுப்பி, அங்கே தானதர்மங்கள் செய்வர். பல்லுயிர்களும் நலம் வாழ தவம் தியானம் யாகம் பலசெய்வார்.
2. மனிதன் மனிதனாகப்பிறந்தவர் நீதி நியாய மாய் வாழ்வார். தான தர்மங்களை செய்வார். மரங்களை நடுவார். மிருகம் பறவைகளுக்கு பசியினை போக்க வழிவகை செய்வர்.
3. மிருகம் மனிதனாகப் பிறப்பது எந்தநேரமும் உழைப்பான். ஆனால், அதனை சரிவர பயன்படுத்தாமல் வீன் செய்து விடுவார். நீதி நியாயம் எதையும் பார்க்காமல் எவர் பொருளானாலும் எடுப்பார்கள். மற்றவர் மனதை துன்புறுத்துவர்.
4. பறவைகள் மனிதனாகப் பிறப்பவன்எப்போது உழைக்காமலே அடுத்தவர் பொருளை பறிக் கவே திட்டமிடுவார். மிருகம் பறவைகளை உயிரென்றும் பாராது அறுத்து உன்பர். நீநி தர்மம் எதையும் செய்யமாட்டார்கள்.
5. நீர்வாழ்வன மனிதனாகப் பிறந்தால்அடுத்த வரைபழித்தல், நயவஞ்சகம் செய்தல், புறம்பேசுதல், இழிவாய் பேசுவது, குற்றச் செயல்கள் செய்வது இதுபோன்ற வைகளை செய்வார்கள்.
6. புளுபூச்சி மனிதனாகப் பிறந்தால் வீண்பழி போடுதல், எந்த வார்த்தையும் தவறாகவே வரும் எல்லோரையும் மகான்களையும் ஏன் கடவுளையும் கூட இழிவாகப் பேசுவார், கொலை களவும் செய்வார்கள்.
7. மரம் செடி மனிதனாகப் பிறந்தால் பூமியில் ஜடமாய் பிறந்து வாழும் எந்தவேலையும்செய் யாது, எதற்காக வாழ்வது என்றே அறியாமல், வாழும் பலவகை தவறுகளைசெய் தாலும் மறந்துவிட்டு செல்வார் எதையும் தின்பார்கள். எதை வேண்டுமானாலும்எடுத்துக்கொண்டு பேசுவார்கள்.

இவ்வாறு அகத்தியர் கர்மகாண்டம் என்ற தனது நூலில் கூறிப்பிட்டுள்ளர்...

# வழிகாட்டிய மயில்
# ஸ்வீடன்அரசு வம்சத்தவர்
# ஸ்ரீ ரமணகிரி ஸ்வாமியான வரலாறு

ரமணகிரி சுவாமிகள் சுவீடன் நாட்டு அரச குடும்பத்தைச் சார்ந்தவர். இயற்பெயர் அலெக் சாண்டர்.

1921 ஜீன் 19ம் நாள் பிறந்த இவர் தனது ஐந்தாவது வயதில் 14–வது தளத்தில் இருந்து தவறி கீழே விழ. எங்கிருந்தோ வந்த ஐரோப்பிய நாட்டில் கண்டிராத பறவை ஒன்று இந்த பை யனை தன் முதுகில் தாங்கி கீழே நிறுத்தி விட்டு மறைந்தது.

அன்று முதல் ஒவ்வொரு நிமிடமும் அந்த பறவை பற்றிய எண்ணங்கள் சிறகடித்தன. வாலிப வயது தனக்கு எதிலும் நாட்டம் இல்லை.

அந்த பறவையை ஒரு முறையாயினும் பார்த்தே ஆக வேண்டுமென

மனதுக்குள் ஏதோ ஒன்று துளைத்துக் கொண்டே இருந்தன.

அதற்கான நிறைவு எங்கு உண்டாகும் என பல நாடுகளில் சுற்றித் திரிந்தார்.



இமயலை அவரை ஈர்த்தது அங்கேயே சில காலம் தியானத்தில் ஆழ்ந்தார். அங்கே இருந்த யோகிகள் இவரை ஆசீர்வதித்தனர்

அதில் ஒரு அம்மையார் இவரிடம் " உனக்கான தேடுதல் தெற்கே சென்றால் கிடைக்கப் பெறும்" என்றவுடன் மிகுந்த ஆர்வத்துடன் விரைந்தார்.

திருவண்ணாமலை அவரை ஈர்த்தது. சிகரத்தின் உச்சியை இமைக்காமல் பார்த்துக்கொண்டிருக்கும் போது ஒரு கடூரமான கூக்குரல் கேட்டு திரும்பினார். அங்கே ஒரு பறவை இவரின் கவனத்தை ஈர்த்தது. அது

ஐந்து வயதில் அவர் கண்ட அதே பறவை அதுதான் மயில் அது பறக்கும் திசை நோக்கி விரைகிறார். அது இரமணாஸ்ரத்தில் அமர்ந்தது.

ஆன்மிகமலர்.காம்





இரமணாஸ்ரமத்தில் நுழைந்தவர் இரமணர் விழி பட்டவுடன் ஸ்தம்பித்து விட்டார் அவரின் உபதேசம் கிடைத்தாயிற்று 48 நாள் மௌனத்தில் ஆழ்ந்தார்.

“இரமணகிரி”என் பெயர் சூட்டப்பட்டு கையில் ஒரு திருஓடு கொடுக்கப்பட்டது அதில் பிட்சை எடுத்து உண்ணும் போது யாராயினும் கேட்டால் அதை கொடுத்து விட்டு உண்ணாமலேயே இருப்பார்.

இதைக்கண்ட இரமணர் “இனி நீ எங்கும் செல்ல வேண்டாம் உணவு உன்னைத் தேடி வரும்” என்றார். சிலகாலம் ஆஸ்ரமத்தில் இருந் தார் பிறகு வடக்கு நோக்கி பயணித்தார்.

இவர் செல்லும் இடங்களில் எல்லாம் மக்கள் திரண்டனர் அவர்கள் தங்கள் வேண்டுதல்களை நிறைவேற்றிக்கொண்டனர்.

இவரும் அவர்களுக்கு அமானுஷ்யமாக அவர்களின் தேவைகளை கிடைக்கச் செய்தருளி னார். ஒரு நாள் நிஷ்டையில் இரமணர் சமாதி அடையப்போவதை உணர்ந்தார் உடனே ஆஸ்ர மத்தை அடைந்தார். இரமணர் சமாதி நிகழ்வு நடந்தேறியது.

அதன் பிறகு சுவாமிகள் சென்னை சென்று திருவான்மியூர் கடற் கரையில் அன்பர் ஒருவரின் குடிசையில் சில காலம் தங்கி இருந்தார்.

தமக்கு வேண்டிய உணவை தாமே சமைத்துக் கொண்டனர் தம்மை

நாடி வருவோர்க்கும் உணவு படைத்தனர். வரும் அன்பர்களுக்கு குறைகளை நீக்கி அரு ளாசி வழங்கினர்.

சுவாமிகள் தமது காலம் நெருங்குவதை உணர்ந்தார். மதுரை வாடிப்பட்டிக்கு அருகில் குட்லாம்பட்டி சிறு மலை அடிவாரம் சென்று சில நாட்கள் நிஷ்டையில் இருந்தார்.

தன்னை சூழ்ந்துள்ள அன்பர்களிடம் தன்னு டைய கபாலம் வெடித்து சிதறும் அதன் பிறகு தன்னை சமாதி செய்து விடுமாறு செல்லி யிருதந்தார்.

அதன்படி நடந்தது. வெடித்து சிதறியதில் கிடைத்த தலை மயிர்கள் சேகரிக்கப்பட்டு பத்திரப் படுத்தினர் அங்கு சமாதி செய்விக்கப்பட்டு லிங்கம் பிரதிஷ்டை ஆயின.அதன் அருகில் அவருடைய தலை மயிர் வைக்கப்பட்டுள்ளதை இன்றும் காணலாம்.

## கோயிலுக்குச் செல்லும் பொழுது...


1. பிறப்பு, இறப்பு, தீட்டுக்களுடன் கோயிலுக் குள் செல்லக் கூடாது.
2. வெறும் கையுடன் கோயிலுக்குப் போகக் கூடாது. குறைந்த பட்சம் பூக்களையாவது கொண்டு செல்ல வேண்டும்.
3. குளிக்காமல் கோயிலுக்குள் செல்லக் கூடாது.
4. சோம்பல் முறித்தல், தலை சிக்கெடுத்தல், தலை விரித்துப் போட்டுக்கொண்டு செல்லுதல் நிச்சயம் கூடாது.
5. கோயில் அருகில் சென்றதும், கோபுரத்தின் அருகே நின்று, ஆண்கள் அனைவரும் இரண்டு கைகளையும் தலைக்கு மேல் உயர்த்திக் கும்பிட வேண்டும்.
6. பெண்கள் தங்கள் இரண்டுகைகளையும் நெஞ்சோடு வைத்துக் கும்பிட்டாலேபோதும்.
7. கைலி, தலையில் தொப்பி, முண்டாசு அணிந்துகொண்டு செல்லக்கூடாது.
8. கவர்ச்சியான ஆடைகள், ஈர துணி, ஓராடை மற்றும் அரைகுறை ஆடைகளுடன் கோயிலுக்குள் செல்லக்கூடாது.
9. பசுமடம் உள்ள கோயிலுக்குச் செல் லும்போது, வாழைப்பழம் அல்லது அகத்திக் கீரை கொண்டு செல்வது சிறப்பு.



# காசி காண்டம்

## (சிறிய முகவுரை)

காசியைப் பற்றி முழுமையான தகவல்களை பல்வேறு மொழிகளில் எழுதி, அனைவரும் காசியைப் பற்றி அறிந்து கொள்ள பல்வேறு முயற்சிகளை செய்யும் எழுத்தாளர் பி.எஸ்.வெங்கடரமணன் காசியைப் பற்றி முழுத் தகவல்களையும் நமது இதழில் தொடராக எழுதுகிறார். இவர் காசியைப் பற்றி எழுதிய புத்தகத்தை பாரதப் பிரதமர் நரேந்திர மோடி பாராட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது. இனி இவரின் தொடரைப் பார்ப்போம்...



பல புராண நிகழ்வுகளுடன் தொடர்புடைய பதினெட்டு புராணங்கள் உள்ளன.

| | |
|---|---|
| 1. பிரம்ம புராணம் | 2. பத்ம புராணம் |
| 3. விஷ்ணு புராணம் | 4. சிவ புராணம் |
| 5. பகவத் புராணம் | 6. நாரத் புராணம் |
| 7. மார்க்கண்டேய புராணம் | 8. அக்னி புராணம் |
| 9. பவிஷ்ய புராணம் | 10. பிரம்ம வைவர்த்த புராணம் |
| 11. லிங்க புராணம் | 12. வராஹ் புராணம் |
| 13. ஸ்கந்த புராணம் | 14. வாம புராணம் |
| 15. கூர்ம புராணம் | 16. மத்ஸ்ய புராணம் |
| 17. கருட புராணம் | 18. பிரம்மாண்ட புராணம் |

அவற்றுள் ஸ்கந்த புராணம் மிகப் பெரியதும் முக்கியமானதும் ஆகும். ஸ்கந்தா என்பது சிவ பெருமானின் மகன் கார்த்திகேயனின் மற்றொரு பெயர். தென்னிந்தியாவில், ஸ்கந்தா பல்வேறு பெயர்களால் வணங்கப்படுகிறார், அதாவது. கந்தன், முருகன், ஆறுமுக பகவான் போன்றவை.

ஸ்கந்த புராணம் ஏழு காண்டங்களை (பிரிவுகள்) உள்ளடக்கியது. அதாவது மகேஸ்வரர் காண்டம், வைஷ்ணவ் காண்டம், பிரம்ம காண்டம், காசி காண்டம், அவந்தி க்ஷேத்ரகாண்டம், நாகர் காண்டம், மற்றும் பிர பாஸ் காண்டம். அனைத்து காண் டங்களிலும், காசிகாண்டம் பல் வேறு மக்களால் படிக்கப்பட்டு மதிக்கப்படுகிறது, இது காசி மற்றும் அதன் முக்கியத்துவத்தை விரிவாக ஆய்வு செய்கிறது.

ஸ்கந்த புராணத்தில் 82,000க்கும் மேற்பட்ட ஸ்லோகங்களும், காசி காண்டத்தில் 13,000க்கும் அதிகமான ஸ்லோகங்களும் இருப்பதாக கூறப் படுகிறது. காசி காண்டம் என்பது ஸ்கந்த பகவான் அகஸ்திய முனிவருக்கு காசியைப் பற்றிய மகிமையை கூறியது. இந்த சம்பவம் க்ருத யுகத்தில் நடந்திருக்கலாம். இருப்பினும், துவாபர யுகத்தில் வியாச முனிவரால் புராணம் கூறப்பட்டது.

பண்டைய காலங்களில் வேதங்களும்சாஸ் திரங்களும் குருக்களால் சொல்லப்பட்டு சிஷ்யர் களுக்கு (மாணவர்களுக்கு) கற்பிக்கப்பட்டன.

வேறுவிதமாகக் கூறினால், எழுத்துநடை முறைக்கு வரும் வரை வாய்வழியாக அனுப்பப் பட்டது. தொடக்கத்தில் வேதங்கள் மற்றும் புராணங்களை எழுதுவதற்கு கடும் எதிர்ப்பு இருந்தது.

12ஆம் நூற்றாண்டில் அல்லது அதற்கு முன் னரே வேதங்கள் மற்றும் புராணங்களை எழுதும் போது காசி காண்டம் எழுத்து முறையில் வந்திருக்க கூடும். ஆனால் காசி காண்டத்தில் உள்ள பல்வேறு விவரங்களின் படி, அதில் கூறப்பட்ட சம்பவங்கள் க்ருத யுகத்தைப் பற்றியது. க்ருத யுகத்தில் தான் (இறைவன்) ஆதி மாதவன் என்று அழைக்கப்பட்டதாகவும், திரேதா யுகத்தில் ஆனந்த மாதவனாகவே வணங்கப்பட வேண்டும் என்றும், துவாபர் யுகத்தில் தன்னை ஸ்ரீ





ஆன்மிகமலர்.காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!



மாதவனாகக் காட்டுவதாகவும் ஒரு இடத்தில் விஷ்ணு கூறினார். கலியுகத்தில் இறைவன் பிந்து மாதவ் என்ற பெயரால் அறியப்பட வேண்டும். அந்த நூல்களில் உள்ள அர்த்தத்தை கவனிக்கும் பொது இங்கு விவரிக்கப்பட்ட விஷயங்கள் க்ருத யுகத்தில் நடைப்பெற்றவை என்பது உறுதியாகின்றது.

காசி காண்டம் எப்போது முதன்முதலில் எழுதப்பட்டது என்பதற்கு எந்த வரலாற்று ஆதாரமும் இல்லை. இருப்பினும், றிமீ. குபேர் நாத் சுகுல் தனது வாரணாசி டவுன் தி ஏஜஸ்" என்ற புத்தகத்தில், 14 ஆம் நூற்றாண்டு கி.பி.யில் காசி காண்டம், காசியை பற்றி ஒரு அதிகாரமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது என்று உறுதியாகக் கூறுகிறார். இது அதற்கு முன்பே எழுத்து வடிவில் இருந்திருக்க வேண்டும் என் ப தை த க்



காட்டுகிறது. ஆனால் எங்கள் கருத்துப்படி, காசி காண்டம் அதற்கு முன்பே வாய்மொழி வடிவில் இருந்திருக்க வேண்டும்.

வியாச முனிவர் அனைத்து புராணங்களையும் உருவாக்கிய பெருமைக்குரியவர் மற்றும் காசி கண்டம் அடங்கிய ஸ்கந்த புராணம் அவற்றில் ஒன்றாகும்.

காசி கண்டத்தின் படி, வியாச முனிவர், கூடியிருந்த அனைத்து முனிவர்களிடமும் பின்வரும் கதையைச்சொன்னார் ஒருமுறை, நாரதமுனிவர் சுற்றித் திரிந்தபோது, விந்தியாசல மலைக்கு வந்தார். அவரை விந்தியாச்சல மலை மிகுந்த மரியாதையோடு வர வேற்றது.

ஆனால், நாரதர் ஓய்வு எடுக்கவேண்டிய நேரம்வந்ததும், அவர் ஆழ்ந்தபெரு மூச்சு விட்டார்.


இது விந்தியாசலத்தை மிகவும் குழப்பமடையச் செய்தது, மேலும் ஏதேனும் தவறு நடந்ததா என்று நாரதரிடம் கேட்டார். நாரதர் பதிலளித்தார் 'உனது போட்டி யாளரான மேரு மலை உன்னை விட எல்லா வகையிலும் உயர்ந் தது, இதைத்தான் நான்புலம்புகி

www.aanmeegamalar.com

றேன். எனது ஆழ்ந்த பெருமூச்சு எனது கவலைக்குரிய மனநிலையின் அறிகுறியாகும்.'

விந்தியாசல மலை தாழ்வு மனப்பான்மையால் பாதிக்கப்பட்டு, மேரு மலையை விட தனது மேன்மையை நிரூபிக்கும் வாய்ப்பிற்காக காத்திருக்கத் தொடங்கினார்.

அவர் நினைத்தார் "ஒருவேளை நாரதர் சொன்னது சரியாக இருக்கலாம். சூரிய பகவான் மேருவினுடைய வலிமையை மிகவும் மதிக்கிறார், அதனால்தான்



அவர் என் எதிரியை சுற்றி வருவார். நான் மேருவை உயரத் தில் வெல்ல முடிந்தால், சூரிய பகவான் என்னைச் சுற்றி வரத் தொடங்குவார், மேருவை விட நான் மேன்மையானவர் என்பதை நிரூபிப்பேன். இப்போது, விந்தியாச்சல் தனது உயரத்தை அதிகரிக்கத் தொடங்கினார், சிறிது நேரத்தில் அதன் சிகரங்கள் கண்ணுக்குப் புலப்படவில்லை.

இந்த அற்புதமான சம்பவம் உலகிற்கு மிகவும் பேரழிவை ஏற்படுத்தியது, ஏனென்றால் சூரிய பகவான் கூட அடிவானத்தில் ஒரு குறிப்பிட்ட புள்ளியில் சிக்கித் தவித்தார். இதன் விளைவாக, பூமியின் ஒரு பகுதி எந்த உயிரினமும் இருக்க முடியாத அளவுக்கு வெப்பமடைந்தது. அதேபோல பூமியின் மறுபாதியும் தாங்க முடியாத அளவுக்குக் குளிரானது. நேரம் ஸ்தம்பித்தது மற்றும் உலகில் உள்ள அனைத்தும் வீணாகிவிட்டன.



அனைத்து தேவர்களும் மிகவும் கவலையடைந்து, பிரம்மாவிடம் உதவி கேட்கசென்றனர். பிரம்மதேவன் அவர்களை காசிக்குச் சென்று அகஸ்திய முனிவரின் உதவியை நாடுமாறு அறிவுறுத்தினார். காசிக்குச் செல்லும் வாய்ப்பு கிடைத்ததைக் கண்டு தேவர்கள் மகிழ்ந்தனர்.

தேவர்கள், காசியைஅடைந்ததும்,'மணிகர்ணிகாதீர்த்தத்திற்கு' சென்று நீராடினர். தொடர்ந்து விஸ்வநாதர் கோவிலுக்கு சென்று விஸ்வநாதரை வழிபட்டனர்.

கடைசியாக, அகஸ்தியரின் ஆசிரமத்தை அடைந்தனர், அங்கு அவர் சுயமாக உருவாக்கப்பட்ட சிவலிங்கத்தை வழிபடுவதில் மும்முரமாக இருந்தார்.

அகஸ்தியரின் இளம் மாணவர்களால் துறவறம் முழுவதும் நிரம்பி வழிந்தது. விருந்து பரிமாறப் பட்ட பிறகு, அகஸ்திய முனிவர் தேவர்களிடம் அவர்கள் வருகையின் நோக்கத்தைக் கேட்டார்.

– காசி பயணம் தொடரும்

பி.எஸ்.வெங்கடரமணன்
தொலைபேசி எண்: 9839061178

● ஆன்மிகம் ● தத்துவம் ● உடல்நலம் ● பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

# கண்ணனைப்பற்றி சுவாரஸ்யமான செய்திகள்



- கம்ச வதம் ஆனபின் கம்சனின் தந்தையான உக்கிரசேனருக்குப் பட்டாபிஷேகம் செய்து வைத்து விட்டு, அவரது பிரதிநிதியாக இருந்து கண்ணன் ஆட்சி செய்தான்.
- கண்ணன் தனக்கென்று பட்டாபிஷேகம் ஏதும் செய்துகொள்ளவில்லை.
- சாந்தீபனி என்ற குருவிடம் பாடம் பயின்ற பலராமனும் கண்ணனும் 64 நாட்களில் 64 கலைகளையும் கற்றார்கள். அவருக்குக் குரு தட்சிணையாக இறந்து போன அவரது மகனை மீட்டுத் தந்தான் கண்ணன்.
- கிருஷ்ணன் – ருக்மிணியின் மகனாக மன்மதன் வந்து பிறந்தான். அவனுக்குப் பிரத்யும்நன் என்று பெயர் சூட்டப்பட்டது.
- பூமிதேவியின் மகனான நரகாசுரன், தனது தாயின் அனுமதியின்றித் தன்னை யாரும் கொல்லக் கூடாது என வரம் வாங்கி இருந் தான். அதனால் தான் கண்ணன் அவனை அழிக்கச் செல்லும் போது, பூமிதேவி யின் அம்சமானசத்யபாமாவோடு சென்று, அவளது அனுமதியுடன் நரகாசுரனை வதைத்தான்.
- நரகாசுரனால் சிறைவைக்கப்பட்ட பதினா றாயிரத்து நூறு இளவரசிகளையும் கண் ணன் மணந்தான்.
- மொத்தம் கண்ணனுக்குப் பதினாறாயிரத்து நூற்றெட்டு மனைவியர்.
- வாலியின் மனைவியான தாரையின் சகோ தரன் துவிவிதன்.
- ராம பக்தனாக இருந்த அவன், ராமனுக்கு நிறைய தொண்டுகள் செய்தான். இருப்பினும் பின்னாளில் நரகாசுரனோடு ஏற்பட்ட நட்பி னாலே, துவிவிதனும் அசுரனாக மாறினான்.
- நரகாசுரன் கண்ணனால் வதைக்கப்பட்டதை அறிந்த துவிவிதன், பலராமனைத் தாக்க வந் தான். அவனைப் பலராமன் வதம் செய்தார்.
- ராமாவதாரத்தில் ராமனுக்குப் பல தொண் டுகள் செய்த கரடியான ஜாம்பவான்,



கிருஷ்ணாவதாரத்தில் தனது மகளான ஜாம்பவதியைக் கண்ணனுக்கு மணம்முடித்துத் தந்தார்.

- மிகச்சிறந்த கிருஷ்ண பக்தரான அக்ரூரர் தனது அடுத்த பிறவியில் சூர்தாஸ் என்ற பக்தராகப் பிறந்தார் என்று சொல்லப்படுகிறது.
- குசேலர் தந்த அவலில் ஒரு பிடியைத் தன் வாயில் போட்டுக் கொண்ட கண்ணன், அடுத்த பிடியைப் போட்டுக்கொள்ள முற்பட்ட போது, கண்ணனைத் தடுத்தாள் ருக்மிணி. “நீங்கள் அவனுக்கு விரைவாகப் பொன்மழை பொழிவதற்கு ஏற்கனவே உண்ட ஒரு பிடி அவல் போதாதா? இன்னொரு பிடியும் வேண்டுமோ?’’ என்பது ருக்மிணியின் கேள்வியாம்.
- கிருஷ்ணன் என்றால் கருநிறம் கொண்டவன், அனைவரையும் ஈர்ப்பவன், பூமிக்கு மகிழ்ச்சியைத் தருபவன் போன்ற பல பொருட்கள் உண்டு.
- கண்ணனில் என்றும் நிலைத்திருப்பதால் அவன் கண்ணன் என்றழைக்கப்படுகிறான்.
- வசுதேவனின் மகனாக அவதரித்தபடியால், வாசுதேவன் என்ற திருப்பெயரும் கண்ணனுக்கு உண்டு.
- கேசியை வதம் செய்ததால் கேசவன். மாடுகளை மேய்த்துப் பராமரித்ததால் கோபாலன். கோபாலன் என்பதே தமிழில் கோவலன் என்றானது.
- கண்ணனின் மகன்களுள் ஒருவனானசாம்பனைத் துரியோதனின் மகளான லட்சுமணாவுக்கு மணம் முடித்துத் தந்தான் கண்ணன். எனவே கண்ணனும் துரியோதனனும் சம்பந்திகள். 125 வருடங்கள் இந்த நிலவுலகில் கண்ணன் எழுந்தருளியிருந்தான்.
- கண்ணன் அவதரித்த ஆவணி ரோகிணி தேய்பிறை அஷ்டமி நாளுக்கு ஜயந்தி என்று பெயர்.
- கண்ணன் அவதரித்ததால் அந்த ஜயந்தி எனும் நாள் சீர்மை பெற்று ஸ்ரீஜயந்தி என்றானது. மற்றவர்களின் பிறந்த நாளையும் நாம் இன்று ஜயந்தி என்று குறிப்பிட்டாலும், உண்மையில் ஆவணி ரோகிணி தேய்பிறை அஷ்டமி திருநாள் மட்டும் தான் ஜயந்தி என்று பெயர் பெற்ற நாளாகும்.

ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

# ஆன்மிகத் தகவல்களை

**எளிமையாக, பாமரர்களும் புரிந்து கொள்ளும் வகையில்**

**ஆன்மிகமலர்** மெயில்

**புத்தகத்தில்** (e-book)

**வெளியிட்டு வருகிறோம்...**

eBook DOWNLOAD free

இதுவரை வெளிவந்த

# 170 க்கும் மேற்பட்ட இதழ்களை




# aanmeegamalar.com

**இணையதளத்தில் இலவசமாக படிக்கலாம்.**



# நாக தோஷ பாதிப்பை போக்கும் அற்புதக் கோவில்கள்

ராகு, கேதுக்களை ‘கரும்பாம்பு’, ‘செம்பாம்பு’ என்று கூறுவதால் இந்த தோஷத்தை ‘நாக தோஷம்’ என்று சொல்வார்கள். இதுபோன்ற நாக தோஷங்களைப் போக்கும் ஒருசில கோவில்களை பார்க்கலாம்.

### காளஹஸ்தி

ராகு, கேதுக்களை ‘கரும்பாம்பு’, ‘செம்பாம்பு’ என்று கூறுவதால் இந்த தோஷத்தை ‘நாக தோஷம்’ என்று சொல்வார்கள். நாகதோஷம் உள்ளவர்களுக்குக் காலா காலத்தில் திருமணம் நடைபெறாது; தள்ளிக்கொண்டே போகும்.

குழந்தை பிறக்காது; சிலருக்கு ஆண் குழந்தை பிறக்காது. சிலருக்குக் கர்ப்பம் தங்காது; கருச்சிதைவு ஏற்படும். சில பெண்களுக்குத் தாலி தங்காது.

இதனால் இதை களத்திர தோஷம் என்றும், மாங்கல்ய தோஷம் என்றும் புத்திர தோஷம் என்றும் கூறுவார்கள்.

ராகு கேது தோஷம், நாகதோஷம், களத்திர (திருமண) தோஷம், புத்திர தோஷம், மாங்கல்ய தோஷம் எது இருந்தாலும் தகுந்த பரிகாரம் செய்து கொண்டு தோஷம் நீங்கி நன்மை பெற முடியும். அப்படிப்பட்ட பரிகாரத் தலங்களில் முதன்மையாக விளங்குவது ஆந்திராவில் உள்ள ‘காளத்தி’ எனப்படும் காளஹஸ்தி அங்கு நாள்தோறும் பரிகார பூஜை நடை பெறுகிறது.

சென்னையிலிருந்து திருப்பதிக்குச் செல்லும் சாலையில் காளஹஸ்தி உள்ளது. காளத்தி வேட னான கண்ணப்ப நாயனார் முக்தி பெற்ற இடம் இது.

மலையில் வாழ்ந்த ஒரு யானை இறைவனை வழிபட்டு முக்தி பெற்றதால், ‘காளத்தி’ என்று பெயர் பெற்றது.

காளத்திநாதர் இங்கு நாகலிங்க வடிவில் காட்சி தருகிறார். இறைவன் நாக வடிவமாகக் காட்சி



தருவதால், இது ராகு, கேது பரிகாரத்தலமாக விளங்குகிறது.

நாள்தோறும் ராகு காலத்தில் தோஷ பரிகார பூஜைநடைபெறுவது இக்கோவிலில் உள்ள தனிச் சிறப்பு. இங்குள்ள ‘ராகு, கேது சாந்தி நிலையம்’ என்ற மண்டபத்தில் இந்த பூஜை நடக்கிறது. மண்டபத்தில் ஒரே நேரத்தில் ஆயிரம்பேர்அமர்ந்து பரிகார பூஜை செய்யலாம். பரிகார மந்திரம் தமிழில் சொல்லப்படுவது தனிச்சிறப்பு ஆகும்.

பூஜைக்குரிய கட்டணத்தை முதலில் செலுத்தி சீட்டுவாங்கி வரிசையாகக் காத்திருக்க வேண்டும். பூஜைக்கு வேண்டிய துளசிப்பூ, வெள்ளெருக்கன் பூ, தர்ப்பை, அருகு போன்ற பூஜை சாமான்கள் கோவிலில் கொடுக்கிறார்கள்.

இது தவிர, கோவிலினுள்ளே இன்னொரு பரிகார பூஜை நடக்கிறது. மாங்கல்ய தோஷம், சர்ப்ப தோஷம், ராகு, கேது தசாபுக்தி நடப்பவர்கள் இந்த சிறப்புப் பூஜையில் கலந்து கொள்கிறார்கள்.

காளஹஸ்தி கோவிலில் மிகப்பெரிய விசேஷம் என்னவெனில் அது வாயு ஸ்தலம் என்பதை விட சர்ப்பதோஷ சாந்தி ஸ்தலம் என்பதுதான் விசேஷம். காரணம் அங்குள்ள அம்பாளுக்கு 180 டிகிரி நேர் கீழாக எதிர்புறத்தில் பாதாள விநாயகர் இருக்கிறார்.

அந்த பாதாள விநாயகர் கோவில் அமைப்பு கூட – பாம்பின் புற்றின் தலை போல் சிறியதாக அமைந்திருக்கும். பாம்பு புற்றுக்குள் செல்வதைப் பார்த்தால் ஒரு உண்மை விளங்கும்.

முதலில் புற்றுக்குள் தலையை நுழைத்ததும் சட்டென்று தலையை வெளியே கொண்டு வந்து பின்பு தன் உடல், வால் புறத்தை உள்ளுக்குள் இழுத்துக் கொள்ளும். இது இயற்கை. இதே போல் நாமும் இந்த பாதாள விநாயகர் கோவிலுக்குள் செல்லும்போது பாம்பைப் போல் தலையை முதலில் உள்ளுக்குள் நுழைத்து பின்பு மற்ற பாகங்களை நுழைந்து கொண்டு குனிந்து செல்ல வேண்டும்.

உள்ளே நுழைந்ததும் நாம் நிமிர்ந்து நடக்கலாம். கீழேயுள்ள விநாயகருக்கு நாமே நமது கையால் அர்ச்சனையோ அபிஷேகமோ பூச்சூடுவதோ செய்யலாம். இந்த விநாயகர் கேது சொரூபம்.

## திருநாகேஸ்வரம்

நாக தோஷத்துக்கு மிகச் சிறந்த பரிகாரத்தலம் –திருநாகேஸ்வரம் கும்பகோணத்துக்குக் கிழக்கே காரைக்கால் செல்லும் பேருந்து மாக்கத்தில் சுமார் ஆறு கி.மீ தூரம் சென்றால் திருநாகேசுவரத்தை அடையலாம்.

நாகேசுவரம் கோவில் மிகப் பெரிய கோவில். நாற்திசைக் கோபுரங்களும், மண்டபங்களும்,கற் தூண்களும், அரிய சிற்பங்களும் நம்மை அசத் தும்.

சந்நிதி நிறைந்த கூட்டம் கால சர்ப்பதோஷம், நாக தோஷம், ராகுதசை, இராகுபுத்தி இவற்றி னால் முன்னேற்றம் காண இயலாதவர், ராகுக்கு அபிஷேக ஆராதனைகள் செய்து சாந்தி பெற தினமும் இங்கு திரள்கிறார்கள்.

கருவறையில் வீற்றிருப்பவர் சண்பகாரணியே சுவரர். இவரே நாகநாதமூர்த்தி என்ற பெயரிலும் மூர்த்தி கரகமாக வீற்றிருக்கிறார். ஐந்து தலை பாம்பு வழிபட்ட மூர்த்தி யாதலினாலே நாகநாதர் என்ற பெயரையே சிறக்கத் தாங்கியருளுகிறார்.

நாகநாதர் சந்நிதியை அடுத்துள்ள சந்நிதியில் சண்முகப் பெருமானும், சண்முகப் பெருமானது சந்நிதியை அடுத்து பிறையணிவாள் நுதல் அம்மை யார் சந்நிதியையும் காணலாம்.

இப்படி ஐயன் இடையே குமரன், அடுத்து அம்பிகையும் காட்சியளிப்பதால் சோமாஸ் கந்தர் அமைப்புடைய கோயில் எனப்படுகிறது.

இத்தலத்தில் மற்றொரு பிராட்டியார் தலத்தின் பெரும் பிராட்டியாராக தனிக் கோயில் ஒன் றில் தவக்கோலத்தில் காட்சி அளிக்கிறார். குன்றா முலை நாயகியாகிய இந்த அம்மையின் இரு மருங்கும் கலைமகளும் திருமகளும் அணிபெற காட்சி அளிப்பது சிறப்பு.

பெரும்பாலும் அர்த்த நாரீஸ்வரர் நின்ற வண்ணம் காட்சியளிப்பதே வழக்கம், இதற்கு மாறாக அப்பொருமான் இங்கே வீற்றிருந்த கோலத்திலேயே ஒரு காலை தொங்க விட்டும் மற்றொரு காலை பீடத்தின் மீது ஊன்றியும், வெகு சொகுசாக அமர்ந்திருப்பதைக் காணலாம். விநாயகர், நான்முகன், இந்திரன் முதலிய தேவர்களும், வசிட்டர், கவுதமர், பராசரர் முதலான முனிவர்களும், பாண்டவர், நளன் முதலிய மன்னர்களும் வழிபட்டு பலன் அடைந்துள்ளனர்.

இக்கோயிலின் இரண்டாம் பிரகாரத் தின் தென் மேற்கு பகுதியில் ஐந்து தலை பாம்பு நாக ராஜா என்று அழைக்கபெறும் ராகு பகவான் சந்நிதி சிறக்க அமைந் துள்ளது. மக்கள் திரள் திரளாக வந்து ராகு பகவானின் அருளாசியை பெறுகிறார்கள்.

மடித்த கால் ஒன்றின் தொடையில் இடக்கரத் தை ஊன்றி வலக்கரத்தால் அபயமளிக்கும் தெய்வமாக வீற்றிருக்கிறார். பாலாபிஷேகம் கண்டருளும் போதெல்லாம் பாலை நீல நிறமாக செய்து திருவிளையாடல் புரிகிறார்.

ராகுபகவானின் அரசருக்கேற்ற அரசிகளாக இரு தேவியர் உள்ளனர். நாகவல்லி நாக கன்னி என்பது அவர்கள் பெயர். இப்படி குடும்ப சமேத ராய் காட்சி அளிப்பது அரிய காட்சி. இவ்விதம் தேவியர் புடைசூழ வீற்றிருக்கும் இத்தல ராகுபகவானுக்கு நம்மனம் குளிர சிறப்பு செய்தால் நாக தோஷம் உடனே விலகிவிடும்.

## திருப்பாம்புரம்

மயிலாடுதுறை – திருவாரூர் சாலையில் உள்ள பேரளம் என்ற ஊரிலிருந்து மேற்கே 7 கி.மி. தொலைவில் திருபாம் புரம் பாம்பு புரேஸ்வர் ஆலயம் உள்ளது. கும்பகோணம் – காரைக்கால் சாலை வழிப்பாதையில் கற்கத்தி என்ற இடத்தில் இறங்கி தெற்கே 2 கி.மீ. சென்றும் இத்தலத்தை அடைய லாம்.

குடந்தை, நாகூர், திருநாகேஸ்வரம், காள ஹஸ்தி, கீழப்பெரும்பள்ளம் ஆகிய நாக தோஷ பரிகார ஸ்தலங்கள் அனைத்தையும் தரிசித்த பலன் திருப்பாம்பரம் ஒன்றை மட்டும் தரிசித்தாலே போதும் என்பது தலமகாத்மியம்.

ராகுவும் கேதுவும் ஏக சரீரியாக அதவது ஒருடலாக இருந்து தன் நெஞ்சில் சிவபெருமானை



வைத்து வழிபட்டதால் இத்தலம் ராகு கேது பரிகாரத் தலமாக விளங்கிகிறது. மேலும் சிவ ராத்திரி அன்று இரவில் ஆதிசேஷன் வழிபடும் நான்கு தலங்களில் இத்தலம் மூன்றாவதாகும்.

மேலும் ஆதிசேஷன், பிரம்மன், பார்வதிதேவி, அகத்தியர், தட்சன், சூரியன் போன்றோர் பூஜை செய்த தலம், இந்திரன் சாபம் நீங்கிய தலம், கங்கை பாவம் தொலைந்த தலம், சந்திரன் பழி நீங்கிய தலம் என்று எண்ணற்ற பெருமைகளைக் கொண்ட தலம் இதுவாகும்.

ஜாதகத்தில் கால சர்ப்ப தோஷம் இருந்தால், 18 வருட ராகு தசை நடந்தால், 7 வருட கேது தசை நடந்தால், ஜாதகத்தில் லக்னத்திற்கு 2ல் ராகுவோ அல்லது கேதுவோ இருந்தால், ஜாத கத்தில் லக்னத்திற்கு 8ல் ராகுவோ அல்லது கேதுவோ இருந்தால், ராகு புக்தி கேது புக்தி நடந்தால், களத்திர தோஷம், புத்திர தோஷம், திருமணம் தடைபடுதல், கனவில் அடிக்கடி பாம்பு வருதல் ஆகிய தோஷங்கள் நீங்க இத்தலத்திற்கு வந்து ஆதிசேஷ தீர்த்தத்தில் நீராடி கோவில் அர்ச்சகர் வழி நடத்தும் வண்ணம் பரிகாரங்கள் செய்து தோஷ நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

கைலாயத்தில் ஒருமுறை விநாயகர் சிவபெரு மானை வழிபடும் போது இறைவன் கழுத்திலிருந்த பாம்பு விநாயகர் தன்னையும் வணங்குவதாக எண்ணி கர்வமடைந்தது. அதனால் கோபமடைந்த சிவன் நாக இனம் முழுவதும் தன் சக்தி அனைத்தும் இழக்கும்படி சாபமிட்டார். அதனால் உலகைத் தாங்கும் ஆதிசேஷனும், இராகு, கேது மற்ற நாக இனங்களும் தங்கள் சக்தி அனைத்தும் இழந்து அல்லல் பட்டன.

சாப விமோசனம் வேண்டி ஈசனைத் துதிக்க இறைவனும் மனமிரங்கி பூவுலகில் சேஷபுரி எனப்படும் திருபாம்புரம் தலத்தில் சிவராத்திரி நாளன்று தம்மை தொழுதால் சாப விமோசனம்




கிட்டும் என அருளினார். அவ்வாறே ஆதிசேஷன் தலைமையில் நாகங்கள் சிவராத்திரி முதல் சாமத்தில் கும்பகோணம் நாகேஸ்வரரையும், இரண்டாம் சாமத்தில் திருநாகேஸ்வரம் நாக நாதரையும், மூன்றாம் சாமத்தில் திருபாம்புரம் பாம்புர நாதரரையும், நானகாம் சாமத்தில் நாகூர் நாகநாதரையும் வழிபட்டு சாபவிமோசனம் பெற்றனர்.

இவ்வாலயத்தின் இராஜகோபுரம் 3 நிலைகளுடன் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இராஜகோபுரத்தின் எதிரே ஆதிசேஷ தீர்த்தம் இருக்கிறது. இத்தலத்தில் கோவில் கொண்டுள்ள பாம்பு புரேஸ்வரரை வழிபட்டால் எல்லா வகையான நாக தோஷங்கள் விலகி விடுகின்றன. மூலவர் பாம்புபுரேஸ்வரர் கிழக்கு நோக்கி நாக கவசம் சாற்றப்பட்டு காட்சி தருகிறார். அம்பாள் சந்நிதியும் கிழக்கு நோக்கி அமைந்திருக்கிறது. அம்பாள் ஒரு கையில் தாமரை மலரையும் மற்றொரு கையில் ருத்திராக்ஷ மாலையுடனும் அபய முத்திரையுடன் காட்சி தருகிறாள்.

இக்கோவிலில் உள்ள சட்டநாதர் சந்நிதியும், மலையீஸ்வரர் சந்நிதியும் மிகவும் விசேஷமானது. தலவிநாயகர் ராஜராஜ விநாயகர் சந்நிதி, தேவார மூவர் சந்நிதி, சனீஸ்வரன் சந்நிதி ஆகியவை இங்குள்ள மற்ற சந்நிதிகளாகும். திருவீழிமிழலை என்ற மற்றொரு பாடல் பெற்ற ஸ்தலம் இங்கிருந்து அருகில் இருக்கிறது. இத்தலத்து கோவிலின் பிரகாரத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருந்து பார்த்தால் திருவீழிமிழலை கோவில் விமானம் தெரியும் என்று கூறப்படுகிறது.

ஆதிசேஷன் வழிபட்ட கோவில் ஆதலால் இன்றும் கோவிலின் உள்ளே பாம்புகள் நடமாட்டம் உள்ளதாக கூறுகிறார்கள். ஞாயிறு, செவ்வாய், வெள்ளிகிழமைகளில் திருப்பாம்பரம் கோவிலுக்குள் மல்லிகையின் மணமோ, தாழம்பூவின் மணமோ வீசுவதாகவும் அச்சமயம் பாம்பு கோவிலுக்குள் எங்கேனும் உலாவிக் கொண்டு இருக்கும் என்று கூறப்படுகிறது. இத் தலத்தில் பாம்புகள் யாரையும் கடிப்பது இல்லை என்கிறார்கள். விஷம் தீண்டாப் பதி என்ற சிறப்பு இத்தலத்திற்கு உள்ளது.

## கீழ்ப்பெரும்பள்ளம்

கேதுவுக்கான பரிகார தலம் நாகை மாவட்டத்தில் உள்ள தரங்கம் பாடி வட்டத்தில் கீழ்ப்பெரும் பள்ளம் என்ற இடத்தில் உள்ளது. கிழக்கு நோக்கிய கோவில்.

இதற்கு ராஜகோபுரம் கிடையாது. கோவிலின் முன்பு நாகத் தீர்த்தம் அமைந்துள்ளது. அதன் கீழ்க்கரையிலும், மேல்கரையிலும் அரசும் வேம்பும் உள்ளது. நாகதோஷமுள்ளவர்கள் இம்மரத்தடியில் நாகப் பிரதிஷ்டை செய்யலாம். கோவிலைச் சுற்றி உயரமான மதில்கள் உள்ளன.

ஆலயத்தின் உள் நுழைந்து வலது பிரகாரத்திற்கு வந்தால் மேற்குப் பிரகாரத்தின் திருமாளிகைப் பத்தியில் விநாயகர், வள்ளி தெய்வானையுடன் சுப்பிரமணியசுவாமி, துர்க்கை, லட்சுமி நாராயணர், மகேஸ்வரி, கஜலட்சுமி ஆகிய தெய்வங்களைக் காணலாம். கிழக்குப் பிரகாரத்தில் திருமாளிகைப் பத்தியில் சனீஸ்வரர், பைரவர், சம்பந்தர், நாகர், சூரியன் முதலானோர் சந்நிதிகள் உள்ளன. இங்கு மேற்கு நோக்கிய



நிலையில் கேது எழுந்தருளியுள்ளார்.

தேகம் தெய்வ வடிவிலும், தலை ஐந்துதலை நாக வடிவிலும் இருகைகளும் கூப்பியநிலையில் உள்ளார். இவரை வழிபட்ட பின் மூலவர் சந்நிதிக்கு எதிரே உள்ள நந்தியையும் பலிபீடத் தையும் வணங்கி மஹா மண்டபத்தில் உள்ள கருவறையில் எழுந்தருளி இருக்கும் லிங்கவடிவில் உள்ள நாகநாத சுவாமியையும் தரிசிக்கலாம்.

மூலவரை வணங்கியப்பின் அர்த்த மண்டபத் திலுள்ள, பஞ்சமூர்த்திகள், நடராஜப் பெருமாள் மற்றும் கேது ஆகிய தெய்வங்களைத் தரிசித்து, திரும்ப மஹா மண்டபத்திற்கு வரும்போது தெற்கு நோக்கியுள்ள சந்நிதியில் சவுந்தர நாயகியைத் தரிசிக்கலாம். இத்திருக்கோவில் காலை 7 மணி முதல் 12 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் 8 மணி வரையிலும் திறந்து இருக்கும். நாலு காலப் பூஜை இங்கு நடைபெறுகிறது.

இத்தலத்திற்குச் செல்ல சீர்காழியிலிருந்து திருவெண்காடு வந்து அங்கிருந்து இத்தலத் திற்குச் செல்லலாம்.

## திருவேற்காடு

சென்னைபூவிருந்தவல்லி நெடுஞ்சாலையில், வேலப்பன் சாவடி என்ற இடத்திற்கு அருகே திருவேற்காடு என்ற இடம் உள்ளது. இங்கு தேவி ஸ்ரீகருமாரி அம்மன் இரண்டு வடிவம் கொண்டு பக்தர்களை காக்க எழுந்தருளியுள்ளாள். ஓர் உருவத்தில் நாகப்பாம்பாக தோற்றம் அளித்து காக்கின்றாள்.

இரண்டாவது உருவத்தில், அம்பிகையாக சுயம்புவாக அழகிய உருக்கொண்டு, நம்பும் பக்தர்களை பரிவுடன் காக்க தோன்றியுள்ளாள். ஒரு காலத்தில் பூவுலகில் ஈஸ்வரனும் அம்பிகையும் வாழ்ந்தனர். அகத்தியர் தேவியையும், ஈசனையும் வரவேற்று அன்புடன் உபசரித்தார்.

எழில்மிகு பாரத பூமியைக் கண்ட தேவி, பூவுலகில் தங்க விரும்பி அகத்தியரிடம் ஸ்ரீ தனக்கு ஐந்தொழில்களான ஆக்கல், அழித்தல், காத்தல், மறைத்தல், அருளல் ஆகியவற்றை திறம்பட செய்திட சரியான இடத்தினை தேர்ந்தெடுக்கும்படி தன் விருப்பத்தைத் தெரிவித்தாள். அகத்தியரும் திருவேற்காடு என்ற பகுதியே அதற்கு சரியான இடமென்று கூறினார்.

தேவியும் மனம் மகிழ்ந்து காமாட்சி, மீனாட்சி, விசாலாட்சி, அந்தரக்கன்னி, ஆகாயக்கன்னி கருமாரி போன்ற எழில் கோலங்களுடன் ஏழு உருவங்களாக மாறிமாறித் தோன்றினாள்.

இவைகளில் கருமாரி என்ற அழகிய வடிவம் கொண்டு திருவேற்காட்டில் நிலைபெற்றாள். கருமாரி தெய்வமாக அம்மா சுயம்பு உருவமாகவும் நாக உருவம் கொண்டும் இரண்டு வடிவத்தில் கருணைக்கடலாக காட்சியளிக்கிறாள்.

கருமாரி அம்மன் ஆலயம் அருகில் கரு நாகப்புற்று ஒன்று உள்ளது. பக்தர்கள் இந்தப் புற்றில் பால் ஊற்றி வழிபடுகின்றனர். அம்பிகை நாகரூபமாக இருப்பதாலும், புற்று வழிபாடு இருப்பதாலும் ராகு, கேது தோஷம் உள்ளவர்கள் இங்கு தங்களது தோஷம் நீங்க வழிபடலாம்.

இந்த ஆலயத்தில் அம்மன் தனிச் சன்னதியில் காட்சி தருகிறார். இந்த அம்மனை வழிபட்டால், கடன் நீங்கி வளம் பெறலாம் என்ற நம்பிக்கையுடன் பக்தர்கள் வழிபடுகின்றனர்.

மாதம் தோறும் 2 புத்தகங்கள்




ஆன்மிக e-magazine

படியுங்கள் இலவசமாக

aanmeegamalar.com

ஆன்மிகமலர்.காம்

# ஆன்மிகமலர்
## மெயில் புக்

# இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் எந்தவித கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக படிக்க












# aanmeegamalar.com

## இணையதளத்தை பார்க்கவும்











# “அனைத்து விதமான பிரச்சனைகளையும் எளிதாக தீர்த்துவைக்கும்” வாழை மரப் பரிகாரங்கள்

## தரித்திர பிணிகள் விலக

வீட்டில் தரித்திரம்தலைவிரித்தாடுகிறதா? அமாவாசை திதி அல்லது தேய்பிறை அஷ்டமி திதிகளில் மூன்று வாழை பூக்களை எடுத்து சூரியன் மறையும் வேளையில் இரண்டு மணிக்கு மேற்பட்டு கடலில் குளித்து விட்டு, தம் உடலில் உள்ள அனைத்து பகுதிகளிலும் படும்படி தடவிவிட்டு, தாம் அணிந்திருக்கும் சட்டை அல்லது பனியன், பெண்ணாக இருப்பின் ஜாக்கெட், புடவை போன்ற துணியில் மூன்று பூக்களையும் கட்டி கடலில் வீசிவட வேண்டும். இப்படி செய்தால் நம்மை பிடித்த தரித்திர பிணிகள் விலகிவிடும்.

## திருமண தடை விலக

திருமணம் தடைப்பட்ட பெண்கள் வாழைப்பூ இதழில் மூன்று குண்டு மஞ்சளை வைத்து முடித்து, வாழை நாரினால் கட்டி முடியிட்டு, வாழை மரத்தின் இலை, குலை தள்ளும் இடத்தில் வைத்து கட்டிவிட வேண்டும். இது போன்று மூன்று சஷ்டி திதி அன்று செய்துவர, விரைவில் திருமணம் நடைபெறும், அதைப்போல் ஆண்கள், குண்டுமஞ்சளுக்கு பதில் கொட்டைப்பாக்கு வைத்து கட்ட வேண்டும்.

## சர்வ தரித்திரங்கள் விலக

ஞாயிற்றுக்கிழமைகளில் பிரம்ம முகுர்த்த



வேலையில் வாழை மரத்தின் வேர் பகுதியில் இருந்து அரை அடிக்கு மேலே ஒரு மூங்கில் குச்சியில் குத்தினால் வாழை நீர் (கங்கை நீர்) வழியும் அந்த நீரை மண் பாத்திரத்தில் பிடித்து கடல் நீருடன் கலந்து வீடுகளில், தொழில் கூடங்களில், நம்மீதும் தெளித்துக் கொண்டு வந்தால் சர்வ தரித்திரங்களும் விலகும்.

(வாழை மரத்தை வெட்டினலோ அல்லது குத்தினாலோ அதிலிருந்து வடியும் நீர் கங்கை நதி நீருக்கு சமமானது, கைலாய கங்கை நீரில் மிதந்து கொண்டு தான் விஸ்வகர்மாவை நோக்கி தவம் புரிந்ததே இதற்கு காரணம்.)

## குழந்தை பாக்கியம் பெற

குழந்தை பாக்கியம் இல்லாத தம்பதிகள் கடவுளுக்கு பஞ்சாமிர்த அபிஷேகம் செய்வித்து, வாழைமரக்கன்றை தானமாகக் கொடுக்கலாம். பின்பு கோயிலுக்கு வரும் பெண்களுக்கு வாழைப்பழங்களை தானமாகக் கொடுக்கலாம்.

ஒன்பது செவ்வாய்க்கிழமைகளில் இரட்டை வாழைப்பழத்தை கோவிலில் உள்ள ஏதாவது தெய்வத்திற்கு படைத்து, பின்பு வீட்டிற்கு எடுத்து வந்து அந்த பழத்தின் தோலில் உள்ள சதையை நகம் படாமல் சுரண்டி எடுத்து காய்ச்சிய பாலில் போட்டு சுத்தமான தேன் கலந்து கணவன், மனைவி இருவரும் பருகிய பின் ஒன்று சேர்ந்தால் குழந்தை பாக்கியம் கிட்டும்.

## பித்ரு தோஷம் விலக

100 கிராம் கருப்பு எள்ளை வாங்கி அதை வெல்லத்துடன் கலந்து ஐந்து பாகங்களாக பிரிந்து, ஐந்து வெள்ளை துணியில் மூட்டை போல் கட்டிக் கொள்ள வேண்டும். பின்பு ஐந்து வாழைக்காய் எடுத்து, ஒவ்வொரு வாழைக்காயில் உள்ள காம்பில் ஒவ்வொரு எள் மூட்டையை மஞ்சள் நூலினால் கட்டி பித்ருக்களை வேண்டி அமாவாசை திதியில் கடலில் விட்டால் பித்ரு தோஷம் விலகும்.

## செல்வம் மேலும் பெருக

சம்பள பணத்தையோ அல்லது சுப காரியத்திற்கு பயன்படுத்தப்பட இருக்கும் பணத்தையோ, வாழைப்பூ இதழில் வைத்து, வீட்டின் பூஜை அறையில் பூஜை செய்து பின் பயன்படுத்தினால் வீண் விரையம் மற்றும் செலவுகள் வராது.



அதேபோல் புதிய தங்க நகை அல்லது வெள்ளி பொருட்களை வாங்கி வந்து, அதையும் வாழைப்பூ இதழில் வைத்து பூஜித்து எடுத்து கொண்டால் செல்லவம் மேலும் பெருகும்.

## வீடுகளில் நிலவும் அன்ன தரித்திரம் விலக

அட்சய சக்தி மிகுந்த இந்த வாழை மரத்திற்கு மற்றொரு மகத்தான பெருமையும் உண்டு. அட்சயதிதி அன்று புதிய தங்கம் வாங்க செய்து, மஞ்சள் கலர் துணியில் முடிந்து, கிழக்கு முகமாக நின்று, ஆபரண மூட்டையை வாழை மரத்தில் கட்டி தீபம் காட்டி, சாம்பிராணி புகையிட்டு, பூஜை முடிந்த பின்பு எடுத்து அணிந்து கொண்டால் ஆபரணங்கள் பெருகும். அதைப்போல் நெல்மணிக்களை கட்டி பூஜித்து அரிசி மூட்டையில் போட்டு வைத்தால் அன்ன தரித்திரம் விலகும்.

## வியாபார விருத்தி பெருக

இதைப்போல் பௌர்ணமி நிலவு ஒளியில், சுக்கிர ஓரை வேளையில், வடக்கு பக்கமாக உள்ள வாழை மரத்தின் வேரை நகமும். இரும்பு கத்தியும் படாமல் எடுத்து கஸ்தூரி மஞ்சளில் சேர்த்து, சிகப்பு நூல் கட்டி கருப்பு வெற்றிலையில் மடித்து, தொழில் நடக்கும் இடத்தில், பணம் வைக்கும் பெட்டியில் வைத்து சாம்பிராணி புகையிட்டுவந்தால் வியாபார விருத்தி பெருகும்.

## வேண்டிய காரியங்கள் விரைவில் நடைபெற

வாழை பழத்தை குலையாக தள்ளும் வாழை மரத்தை தேர்ந்தெடுத்து முகுர்த்த நாளில் சுபவேலையில் அதன் வேர்ப் பகுதியில் சிறு குழி எடுத்து வலம் புரி சங்கை கிழக்கு முகமாக புதைத்துவிட வேண்டும்.

பின்பு வாழை மரத்தின் வேர்பகுதியில் சங்கு இருக்கும் இடத்தில் தினம் சிறிது பாலை ஊற்றி நாற்பத்தியைந்து (45) நாட்கள் வாழைமரத்திற்கு இஷ்ட தெய்வத்தை நினைத்து தூப தீபம் காட்டி பூஜித்து வரவேண்டும்,

பின்பு ஒரு முகுர்த்த நாளில் சுப வேலையில் சங்கை எடுத்து மூன்று வித அபிஷேகங்கள் செய்து தூப தீபம் காட்டி பூஜை அறையில் வைத்து வழிபட்டு வந்தோமானால். நாம் வேண்டிய காரியங்கள் விரைவில் நடைபெறும், குடும்பம் சுபிக்ஷம் பெருகும், பணம் வீன் விரையம் ஆகாது, தெய்வகுறைகள் விலகும், குல விருத்தி அடையும்.


அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
SML Graphics
Sree Maha Laksmi Graphics
செல்: +91-9444228203

கட்டாய சந்தா இல்லை!

சப்ஸ்கிரைப் இல்லை!!

மாற்று மத திணிப்பு இல்லை!!!

தரம் மட்டுமே
நமது இதழின் தாரகமந்திரம்,
வியாபார நோக்கத்துடன் செயல்படும்
மற்ற ஆன்மிக இதழுக்கிடையே
சேவையை மட்டுமே நோக்கமாக
கொண்ட ஒரே தரமான
ஆன்மிக இதழ்

ஆன்மிகமலர்.காம் வழங்கும்
ஆன்மிகமலர் மெயில் புத்தகம்
ஒரே கிளிக் **170** இதழ்களையும்
டவுன்லோடு செய்து படியுங்கள்

மேலும் விபரங்களுக்கு
aanmeegamalar.com இணையதளத்தை பாருங்கள்

# ஈரான் நாட்டில் சூரிய வழிபாடு!



கண்ணுக்கு நேராக தெரிகின்ற கடவுளாகிய சூரிய பகவானை வழிபடுகின்ற மக்கள் ஒரு காலத்தில் உலக முழுவதும் பரவி இருந்தார்கள்.

நமது பாரத நாட்டில் சூரியனை வழிபடாத மக்களே இல்லை என்று சொல்லுகின்ற அளவிற்கு சௌர மத பிரிவு மிகுந்த செல்வாக்கை ஆறாம் நூற்றாண்டு வரை பெற்று இருந்ததாக சில ஆய்வுகள் சொல்கின்றன சூரிய கடவுளுக்கான தனிகோயில்கள் ராஜஸ்தான், கூர்ஜரம், காஷ்மீர், வங்காளதேசம், தமிழ்நாடு போன்ற பகுதிகளில் பரவலாக இருந்திருக்கின்றன.

அவற்றில் அன்னியர் படையெடுப் பால் பல அழிந்து விட்டாலும் ஒருசில இன்றும் உயிரோடு இருந்து சூரிய வழிபாட்டின் சிறப்புகளை கல்லில் வடித்த எழுத்துக்களாக நமக்கு காட்டி நிற்கின்றன.

உலகத்தின் உயிராகஇருக் கும் சூரியனுடைய வழிபாடு இப்போது தான் ஏற்பட்டது என்று கால அளவு வைத்து சொல்லிவிட முடியாது.

கால கணிதங்களுக்குஅகப் படாத காலம் தொட்டேசூரியனை மக்கள் வழிபட்டு வந்தார்கள். சர்வ வியாபியாகவும் சர்வசாட்சி யாகவும் அஞ் ஞான இருட்டை போக்கு வதாகவும் கால தேச பருவ சூழலால் பாதிக்க படாததாகவும் நிற்பது சூரியன் இறைவனுடைய பரதத்துவத்தை விளக்குவதற்கு கண்ணுக்கு தெரியும் பொருளாக இருப்பது சூரியனாகும். அதனால் இது தான் மனிதனின் முதல் உபாசனையாக இருந்திருக்க வேண்டும் என்ற முடிவிற்கு வந்தால் கூட அது தவறல்ல என்று தோன்றுகிறது.

மனிதகுலம் சூரிய தேவனை எப்படியெல்லாம் ஆராதனை செய்கிறது என்பதை நான்கு வேதங்களிலும் மிக தெளிவாக காண முடிகிறது.

அறிவுடைய மனிதனின் முதல்சிந்தனை தொகுப்பான ரிக் வேதம்சூரியனைமூன்று வித அக்னிகளில் ஒருவனாக புகழ்கிறது. உதய



ஜோதி என்ற பெயர் கொடுத்து ரிக் வேதம் சூரியனை வழிபடுவதை பார்த்தால் மனதில் நிச்சயம் சிலிர்ப்பு ஏற்படும். யஜூர் வேதம் ஜோதியை உண்டாக்குபவன் என்றும் சகல உலகங்களையும் ஒளிபெற செய்பவன் என்றும் சூரியனை கொண்டாடுகிறது.

அருண கடாகம் என்ற தனி பகுதியை சூரியனை பற்றி யஜுர் வேதத்தில் இருக்கிறது. இசையின் வடிவான சாம வேதம் உலகம் முழுவதும் ஒளிர்பவன் என்ற சிறப்பு பெயரை சூரியனுக்கு தருகிறது. இறைவனின் கண் என்றே அதர்வண வேதம் சூரியனை போற்று கிறது.

சதபத பிராமணம் சூரியனை ஜோதி பிழம்பு என்றும் பொன் ஆரங்களான வட்டங்களை உடையவன் என்றும் போற்றுகிறது. இது தவிர பவிஷ்ய புராணம், பிரம்ம புராணம், வராக புராணம், மச்ச புராணம்,அக்னி புராணம், கருட புராணம், பவிஷ்யோத்ர புராணம், காளிகா புராணம், மார்கேண்டைய புராணம் ஆகிய பழம் பெரும் புராண நூல்கள் சூரியனின் சிறப்புகளை வரலாற்றை நமக்கு மிக தெளிவாக காட்டுகிறது.

இதுமட்டும் அல்ல உலகத்தை காத்து ரச்சிக்கும் முழுமுதலான கடவுள் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா தமது திருவாய் மலர்ந்தருளிய பகவத் கீதையில் வேத சாஸ்திரத்தில் நான் சாம வேத மாகவும், பிரகாசிக்கும் பொருட்களில் நான் சூரியனாகவும் இருக்கிறேன் என்று அழகுபட சொல்கிறார்.

மந்திரங்களில் தலைசிறந்தது என்றும் ராஜ மந்திரம் என்றும் சொல்லபடுவது காயத்திரி மந்திரமாகும் இந்த மந்திரத்தைபிரபஞ்ச வெளி யில் இருந்து கண்டறிந்து உலக மக்களுக்கு தந்தவர் விஸ்வாமித்ர மகரிஷி இந்த காயத்திரி மந்திரம் சூரியனை உபாசனை செய்கிறது என்பது அனைவரும் அறிந்த செய்தி.

“ஓம் பூர் புவஹ ஸ்வஹ  
ஓம் தத் ஸவிதுர் வரேண்யம்  
பர்கோ தேவஸ்ய தீமகி  
த்யோ யோநஹ ப்ரசோதயாத்”

என்ற இந்த காயத்திரி மந்திரத்தின் பொருள் எந்த தேவன் உலகத்தில் உள்ள இருட்டை நீக்கி வெளிச்சத்தை தருகிறானோ ஒளியை பரப்புகிரானோ அவன் நமது புத்தியை பிரகாசிக்க செய்யட்டும் என்பதே ஆகும். இதை அப்பர் சுவாமிகள் மிக இனிமையான தமிழ் நடையிலும் நமக்கு தருகிறார்.

அருக்கன் பாதம் வணங்குவார் அந்தியில்  
அருக்கன் ஆவான் அரனுரு வல்லானோ  
இருக்கு நான்மறை ஈசனையே தொழும்  
கருத்தினை நினையார் கண்மனவரே

என்று சூரிய வழிபாட்டின் பெருமையை நம்மை போன்ற சாதாரண மனிதரும் அறியும் படி செய்கிறார். வராகமிகிரர் என்ற புகழ்பெற்ற இந்திய வானியல் சாஸ்திரி தாம் எழுதிய ப்ருஹத் சம்ஹிதை என்ற நூலில் சூரியனுக்கு காலில் இருந்து தொடை வரை கவசமும் கரங்களில் தாமரை மலரும் தலையில் மகுடமும் காதில் குண்டலமும் இடுப்பு கச்சும் புன்முறுவல் பூத்த வாயும் பிரசன்ன முகமும் குருதி சிவப்பான வட்டத்திற்குள் அடங்கிய வடிவமாகவும் சூரியனின் சிற்பம் செதுக்கப்பட வேண்டும் என்று கூறி ஆதிகால சூரிய தேவனின் வழிபாட்டு உருவத்தை நமக்கு தெளிவுபடுத்தி விடுகிறார்.

தமிழ் இலக்கியங்களும் சூரிய பகவானை விட்டு வைக்கவில்லை தமிழ் புலவர்களின் அழகிய கற்பனைக்கும் தத்துவ மோகத்திற்கும் சூரியன் பல கொடைகளை வாரி வழங்கி இருக்கிறன். நமது புலவர்களின்



செந்தமிழ் விருந்தில் சூரிய சித்திரம் வடித்து காட்ட படுவதை மனகண்ணில் பார்க்கும் போது கொலைகாரனுக்கு கூட ஆன்மிக சிந்தனை ஊற்றெடுத்து பெருகி விடும்.

பேராழி உலகனைத்தும் அகல இருள் நீங்க ஏறாழி தனை நடத்தும் ஒளிசுடர் பரவுதுமே என்றும் ஒருகால் தேர்ச்செல்வன் என்றும் ஏழு குதிரைகள் பூட்டிய ஒரு சக்கரமே கொண்ட தேரில் பவனி வரும் நாயகன் என்றும் சூரியன் பலவாறு போற்ற படுகிறான்.

ஆலய நெறிமுறைகளையும் ஆன்மீக கோட்பாடுகளையும் தெளிவாக விளக்கும் ஆகம நூல்களில் சூரிய மண்டலத்தில் நடுநாயகமாக இறைவனாகிய சிவபெருமான் இருக்கிறான் என்றும் இதனால் சூரியன் சிவ சூரியன் என்ற சிறப்பு பெயரை பெறுகிறான் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

மேலும் சிவபெருமானின் அஷ்ட மூர்த்திகளில் சூரியனும் ஒருவன் அவனே சிவனாரின் வலது கண்ணாக திகழ்கிறான் என்றும் ஆகமங்கள் சூரியனை பக்தர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கிறது.

ஆதிகாலத்தில் சூரிய வழி பாடு மந்திர வழிபாடாகவே இருந் தது. ஆகமங்கள் சூரியனை பஞ்சாயதன பூஜை முறையில் வழிபாடு செய்யும் மார்க்கத்தை மிக விரிவாக பேசுகின்றன.

அதுமட்டும் அல்ல சூரியனுக்கானதனி யந்திர வழிபாட்டையும் ஆகமங்கள்வலியுறுத்துகின்றன. கங்கை கொண்ட சோழபுரத்து சிவாலயத்தில் கல்லில் ஒருகமல யந்திரம் வடிவமைக்கபட்டுள்ளது.

இந்த யந்திரத்தில் சூரியனின் உதயகோலம் மிக அழகாக சித்தரிக்கப்பட்டுள்ளது.

சிலை வழிபாடுகள் மந்திர வழிபாடுகள் யந்திர வழிபாடுகள் இவைகளையும் தாண்டி சூரியன் மக்கள் மத்தியில் ஜோதிட ரீதியாக வணங்கப்படும் மிக முக்கிய தெய்வமாக கருதபட்டான்.

இந்திய ஜோதிட சாஸ்திரம்சிம்ம ராசிக்குரிய கிரகமாக சூரியனை காட்டுகிறது. கிரகங்களில் நடுநாயகமாக சூரியன் கருதப் படுவதோடு அவனே நவக் ரகங்களில் நாயகனாக இருக்கிறான். ஒரு ஜாதகத்தில் முன்னோர்களின் தலைவனாகவும் ஆயுளை கொடுப்பவனாகவும் ஆரோக்கியத்தை காப்பவனாகவும் சூரியன் இருக்கிறான்.



யோகி
ஸ்ரீ ராமானந்த குரு

ஜோதிட சாஸ்திரம் சூரியனை சத்வ குணம் நிரம்பியவன் என்று சொல்கிறது. கோதுமை தானியம் அவனுக்கு மிகவும் பிடித்தது என்றும் மனித சரிரத்தில் பித்தத்தை ஏற்படுத்துபவன் என்றும் சொல்லபடுகிறது.

சூரியன் மாதம் ஒரு ராசியில் அமர்கிறான் அவன் வருடத்தில் ஒருமுறை மகர ராசிக்கு வருகை தருவதை சங்கராந்தி என்றும்பொங் கல் திருநாள் என்றும் இந்திய மக்கள் கொண்டாடுகிறார்கள். சூரியன் ஆண்டு தோறும் ஆடி மற்றும் தை மாதங்களில் உத்தராயணம் தட்சணாயணம் என்ற இரண்டு பகுதிகளுக்கு மாறுவதை மகா புண்ய காலமாக இந்துக்கள் கொண்டாடி மகிழ்கிறார்கள்.

இந்த காலங்களில் சூரியனின் பார்வை தெற்கில் இருந்து வடக்கேயும் வடக்கே இருந்து தெற்கேயும் மாறுபடுகின்றது. இதனால் உலகின் பருவ கலங்களும் முறைப்படி மாறி மாறி வந்தமைகின்றன. மழை வருவதும் வெயில் அடிப்பதும் பனி பொழி வதும் சூரிய மாற்றத்தினாலே என்பதை நாம் அறிவோம். உலகின் போக்கையே தனது கட்டுபாட்டுக்குள் வைத்திருக்கும் சூரிய வழிபாடு எங்கெங்கு இருந்தன என்பதை அடுத்த பகுதியில் சிந்திப்போம்.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
போன்: 09442426434

# ஜாதக கண்டங்கள் விலகவும் ஆயுள் விருத்தியடையவும் சிவபுராணம் கூறும் வழிமுறை



செல்வங்களுள் மிக பெரிய செல்வம், ஆயுள். ஆயுள் இல்லாதவனுக்கு 1000 வந்தென்ன, போயென்ன என்பர்.

இந்த ஆயுளை பெற ஆண்டவனை வேண்டு வதை தவிர வேறு வழி இல்லை!!!

ஆயுளை கொடுப்பவர் பிரம்மா, ஆயுளை பாது காப்பவர் விஷ்ணு, ஆயுளை போக்குபவர் சிவன்.

சிவம் மூவராய் இருக்கிறார். அம்மூவர் சிவன், ருத்ரன், தட்சிணாமூர்த்தி ஆவர். அம்மூவருள் எமனை ஏவலாளாக வைத்து அழிவு செயல்களை செய்பவர் ருத்ரன்.

ஆயுள் பலம் பெற இந்த ருத்ர மூர்த்தியை வணங்க வேண்டும். ஆயினும் , ருத்ரமூர்த்தியை வணங்க சிலை வழிபாடு இல்லை. எனவே , எல்லாம் வல்ல சிவனை வணங்கி வழிபட்டாலே போதும். சிவனை வழிபட 2 முறைகள் உண்டு.

1. மானசீக பூஜை

2.விரத பூஜை .

மனதை ஒருநிலை படுத்தும் ஆற்றல் உள்ளவ ராலே மானசீக பூஜை செய்ய முடியும். மானசீக






மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”
aanmeegamalar.com
இணையதளத்தில் இலவசமாக டவுன்லோடு செய்தும் படிக்கலாம்


பூஜை என்பது உடல் உள்ளத் தூய்மையுடன் தெற்கு நோக்கி அமர வேண்டும். . மனதிற்குள் லிங்கத்தை நினைக்க வேண்டும்.

அந்த லிங்க வடிவிற்கு அபிஷேகம் அலங் காரம் செய்து, தூப தீப ஆராதனை செய்துவழிபடுவதாக மனக்கண் முன் கொண்டுவர வேண்டும்.

உள்ளத்தில் இந்த உருவ வழிபடு நடக்கும் போது உதடுகள் ” ஓம் நமசிவாய நம ” என்னும் மந்திரத்தை உச்சரிக்க வேண்டும். மானசீக பூஜை முடிந்ததும்கண் களை திறந்து, திறந்த வெளிக்கு கற்பூர ஆராதனை காட்டி பூஜையை முடித்து கொள்ள வேண்டும். அதற்கு பின்னர், ஷிவா ஸ்தோத்திரத்தை சொல்லி வழிபடலாம். இம்மானஸீக பூஜையை இயன்றவர்கள் வழிபடலாம். விரதபூஜை, இப்பூஜை முறைப்படி, ஒவ்வொரு திங்கள் கிழமையும் விரதமிருக்க வேண்டும். அதற்கு சோமவார விரதம் என்று பெயர். திங்கட் கிழமை விரத மிருக்க தொடங்கி னாலும் ஞாயிறு முழுவதும் அசைவ உணவு கூடாது. ஞாயிறு இரவுபலகாரமோ, பாலும் பழமும் மட்டுமே உட் கொள்ள வேண்டும்.



ஞாயிற்றுக்கிழமை இரவு, ஒரு செம்பு பாத்திரத் தில் வில்வத்தலங்களை இட்டு நீர், விட்டு மூடி வைத்து விட வேண்டும்.

திங்கட்கிழமை அதிகாலை எழுந்து நீராடி முடித்து விட்டு, விநாயகருக்கு வீட்டில் முறைப்படி பூஜை செய்ய வேண்டும். பூஜை முடிந்ததும், சிவன் கோவிலுக்கு சென்று, அர்ச்சனை ஆராதனைகள் செய்து, வழிபட வேண்டும். வீட்டிற்கு வந்ததும் சிவ தோத்திரங்களை சொல்லியபடியும், சிவ மஹாபுராணத்தைப் படித்த படியும் இருக்க வேண்டும். காலை உணவாக வில்வ தள நீரை மட்டுமே அருந்த வேண்டும்.

மதியம் பச்சரிசி, பச்சைப்பருப்பு, வெள்ளம் ஆகியவற்றை கலந்து சமைத்த உணவை சாப்பிட வேண்டும். இந்த உணவை, விரதமிருப்பவரே சமைத்து கொள்ளுவது மிக சிறந்தது.

மாலையில் சிவன் கோவில் சென்று வில்வ தள அர்ச்சனனை செய்ய சொல்லி வழிபடு செய்ய வேண்டும். இரவு வில்வ தள நீருடன், இளநீர், தேன் கலந்த பசுவின் பால் ஆகியவற்றை அருந்தலாம்.

இப்படி நூற்றெட்டு சோமவார விரதங்கள் இருந்தால் ஆயுள் விருத்தி ஏற்படும். சோமவாரத்தில் பௌர்ணமி நாள் அமைந்தால், அன்று ஏழைகளுக்கு அன்னதானம் செய்ய வேண்டும். அவ்வாறு செய்தால், முற்பிறவி பாவங்கள் விலகி, ஜாதகங்களில் உள்ள கண்டங்கள் மாறி, ஆயுள் விருத்தி ஏற்படும் என சிவபுராணம் கூறுகிறது.

# ஆன்மீக வழியில் அமைதி




அகங்காரம் என்பது உலக வழக்கில் குறிப்பிடுவதுபோல் கர்வப்படுவது அல்ல. நமது எண்ணங்களில் செயல்பாடுகளில் 'நான்' என்ற எண்ணம் வருவதற்குப் பெயர் அகங்காரம். 'நான் செய்கிறேன்' 'நான் கஷ்டப்பட்டு காப்பாற்றினேன்' 'நான் இல்லையென்றால் அவன் பிழைத்து இருக்க மாட்டான்' என்று 'நான்' என்பதை ஆணவத்துடன் கூறுவது அகங்காரம் என்று சாஸ்திரம் கூறுகிறது. மனிதனுக்கு ஏற்படக்கூடிய அகங்காரம் பற்றி

''ஆங்காரம் உள்ளடக்கி ஐம்புலனைச் சுட்டறுத்து, தூங்காமல் தூங்கிச் சுகம் பெறுவது எக்காலம்?'' என்று பத்ரகிரியார் புலம்புகிறார்.

ஒரு மனிதன் தனக்குப் பணம், பதவி, புகழ் எல்லாம் வர வேண்டும் என்று இறைவனை இடைவிடாமல் வேண்டிக்கொள்கிறான். அவன் புகழின் உச்சிக்குச் சென்றவுடன் தன்னுடைய புகழுக்குத் தான்தான் காரணம் என்று மனதுக்குள் கர்வம்கொண்டு இறைவனை மறந்து ஆணவத்துடன் செயல்புரிகிறான். அவ்வாறு மனதுக்குள் கர்வம் கொள்வது அவன் மன அமைதியைக் கெடுத்து விடும். எனவே ஒரு மனிதன் பணம், பதவி, புகழ், திறமை போன்றவற்றில் உயர்ந்த நிலையில் இருந்தாலும் அவன் 'நான்' என்ற ஆணவத்துடன் செயல்படக்கூடாது என்பதற்கு மகாபாரதத்தில் ஒரு கதை வருகிறது.

பஞ்சபாண்டவர்களில் ஒருவன் அர்ச்சுணன் என்பவன் வில்வித்தையில் சிறந்து விளங்கினான். வில்வித்தையில் சிறந்து விளங்கிய அர்ச்சுணன் தன்னை விட வில்வித்தையில் சிறந்தவன் எவனும் உலகில் இல்லை என்று மனதில் கர்வம் கொண்டிருந்தான். 'இராமபிரான் வில்வித்தையில் சிறந்தவன் என்று கூறுகிறார்களே அவன் இலங்கைக்கு போர்புரியச் செல்லும்போது, சேது

67

சமுத்திரத்தைக் கடந்து செல்வதற்கு அவன் தன்னோட வில்வித்தை திறமையால் அம்புகளால் பாலம் அமைத்திருக்கலாமே' என்று அர்ச்சுணன் மனதில் சந்தேகம் இருந்துகொண்டே இருந்தது. அதே சிந்தனையுடன் ஒரு ஆற்றங்கரையின் வழியாக வில்லேந்தி நடந்து சென்று கொண்டிருந்தான்.

அந்த ஆற்றங்கரையில் ஒரு மரநிழலில் ஆஞ்சநேயர் சாதாரண வானரம் போன்ற வடிவில் கண்களை மூடி தியானத்தில் அமர்ந்து ராம நாமத்தை ஜெபித்துக் கொண்டிருந்தான். வானர வடிவில் அமர்ந்திருப்பவன் ஆஞ்சநேயர் என்பதை அர்ச்சுணன் அறியாமல் அருகில் சென்று ' ஏ வானரமே ராமன் வில்வித்தையில் சிறந்தவன் என்று கூறுகிறார்களே அவன் தன்னோட வில்வித்தை திறமையால் சேது சமுத்திரத்தில் அம்புகளால் பாலம் அமைத்து இருக்கலாமே. உன்னைப்போன்ற வானரங்களைக்கொண்டு பாறைகளால் ஏன் பாலம் அமைத்தான்' என்று கேட்டான்.

அர்ச்சுணன் குரல் கேட்டு வானரம் வடிவில் இருத்த ஆஞ்சநேயர் தியானத்தில் இருந்து விடுபட்டு அவனது ஆணவத்தை அழிக்க வேண்டும் என்று மனதில் எண்ணிக்கொண்டு ' என்ன சொல்கிறாய் அர்ச்சுனா. இராமபிரான் வில்வித்தையால் அம்புகளால் பாலம் அமைக்கலாம் என்றா சொல்கிறாய். அவ்வாறு அம்புகளால் இராமன் பாலம் அமைத்திருந்தால் என் ஒருவனின் பளுவைத் தாங்கமுடியாமல் பாலம் விழுந்திருக்கும். வானரசேனைகளின் பளுவை எப்படி அம்புகளால் அமைக்கப்பட்ட பாலம் தாங்கும் ' என்று அர்ச்சுனனுக்கு ஆஞ்சநேயர் மறுமொழி கூறினார்.

'வானரமே நான் இந்த ஆற்றின் குறுக்கே என்னோட வில்வித்தை திறமையால் அம்புகளால் உறுதியான ஒரு பாலம் அமைத்துக் காட்டுகிறேன். அதில் நீ நடந்து சென்று அக்கரைக்குச் செல்லலாம். நீ அம்புப்பாலத்தில் நடந்து செல்லும்போது பாலம் விழுந்து விட்டால் எனது தோல்வியை ஒப்புக்கொள்கிறேன். நீ என்ன சொல்கிறாய் ' என்று அர்ச்சுணன் ஆணவத்துடன் கேட்டான். ஆஞ்சநேயர் கண்ணை மூடி ராமபிரானை நோக்கிச் தியானம் செய்து விட்டு, அர்ச்சுணனால் அம்புகளால் அமைக்கப்பட்ட பாலத்தில் அவன் காலை வைத்து நின்றவுடன் பாலம் நொறுங்கி கீழே விழுந்து நொறுங்கி விட்டது. அர்ச்சுணனின் ஆணவமும் அத்துடன் நொறுங்கி விழுந்தது.

சித்தம் என்றால் ஒவ்வொருவருடைய மனதில் இருக்கும் எண்ணங்களின் பதிவுகள். நமது செயலின் மூலம் ஒரு அனுபவம் நமக்கு ஏற்படுகிறது என்று வைத்துக்கொள்வோம். நமது செயல்பாடு மற்றும் அனுபவம் எல்லாம் இயல்பாக நம்மை விட்டு அகன்றாலும் நாம் அதனைப் பற்றி நினைத்துக்கொண்டே இருப்பது சித்தம் ஆகும். உலக வழக்கில் அதனை நினைவுகள், ஞாபகங்கள் என்று கூறுகிறோம். நமக்கு ஏற்படக்கூடிய எண்ணங்கள், செயல்பாடுகள், அனுபவங்கள் அனைத்தையும் நமது மனதில் பதிவு செய்வதற்கு அதாவது ஞாபகத்தில் வைத்துக்கொள்வதற்கு கடவுள் அனுமதி அளிப்பதில்லை.

எடுத்துக்காட்டாக ஒருவர் ஒரு வாரத்திற்கு முன்பு காலை பத்து மணிக்கு ஐந்து இட்லிகள் சாப்பிடுவதாக வைத்துக் கொள்வோம். அவரிடம் ஒரு வாரம் கழித்து கடந்த வாரம் காலையில் என்ன சாப்பிட்டீர்கள் என்று கேட்டால் அவர் எனக்கு ஞாபகம் இல்லை என்றுதான் கூறுவார். கடவுள் அந்த நினைவை அவருக்குத் தெரியாமல் அவர் மனதிலிருந்து அழித்துவிட்டார் என்பதுதான் காரணம். நமது மனதில் தோன்றும் இது போன்ற குப்பையான எண்ணங்கள் நினைவுகளை பதியும்படி செய்யக்கூடாது என்பது கடவுளுக்குத் தெரியும். ஆனால் சில அனுபவங்களின் பதிவுகள் மனதில் அழியாமல் இருக்கும்படி அதாவது நினைவில் ஞாபகத்தில் இருக்கும்படி கடவுள் செய்து விடுகிறார்.

எடுத்துக்காட்டாக ஆன்மீகத்தில் ஈடுபாடு உள்ளவர்களின் மனதில் ஆன்மீகக் கருத்துக்கள் மற்றும் செயல்பாடுகள் போன்றவை நன்கு பதிந்து இருக்கும். ஆன்மீகக் கருத்துக்கள் மீது அவர்கள் ஆர்வமாக இருப்பதுதான் அதற்கு முக்கிய காரணம் ஆகும். அதேபோல் ஒருவர் பிறரிடம் ஏதோவொரு சூழ்நிலையில் அவர் மனம் புண்படும்படி பேசி விடுகிறார் என்று வைத்துக் கொள்வோம். அவர் பேசிய அந்த புண்பட்ட வார்த்தைகள் சொற்கள் வடுபோல் நீங்காமல் அவர் மனதில் பதிந்து விடும். இதனை திருவள்ளுவர் திருக்குறளில்

தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு – என்று கூறுகிறார்.



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்



நமது மனதில் பதியும் எண்ணங்களை நினைவுக்குக்கொண்டு வருவதற்கு சித்தம் என்று ஆன்மீகத்தில் கூறப்படுகிறது. நமது மனதில் தோன்றக்கூடிய எண்ணங்களை மீண்டும் நினைவுக்குக் கொண்டு வரும்போதுதான் அதாவது ஞாபக சக்தி இருந்தால்தான் நாம் இந்த உலகில் வாழ்வதற்கு முடியும். வாழ்வில் ஏற்படும் சில அனுபவங்கள் செயல்பாடுகள் உடனடியாக மறந்து விடுவதாக வைத்துக்கொள்வோம். அவ்வாறு நமது எண்ணங்கள் அனுபவங்கள் செயல்பாடுகள் எல்லாம் மறந்து விட்டால், நாம் இந்த உலகில் நிம்மதியாக வாழ்வதற்கு முடியாது.

எடுத்துக்காட்டாக நாம் உண்ணும் உணவை தயார் செய்வதைப் பற்றி நினைவு வைத்திருந்தால் மட்டும்தான் நாம் சமையல் செய்வதற்கு முடியும். உணவு தயார் செய்வதைப்பற்றி அதாவது உணவு தயாரிக்கப் பயன்படும் பொருட்கள் மற்றும் செய்முறைகள் எல்லாம் மறந்து விட்டால் நாம் உணவை தயார் செய்து சாப்பிட முடியுமா? என்பதை பற்றி சற்று சிந்தித்துப் பாருங்கள்.

நமக்கு வேண்டியதையெல்லாம் அதாவது நமது வாழ்க்கைக்கு அத்தியாவசியத் தேவையானவை எதுவோ அவற்றையெல்லாம் நம்மை அறியாமல் நம் மனதில் பதியும்படி கடவுள் செய்து விடுகிறார். அதனை உரிய நேரத்தில் அவர் வெளிப்படுத்தி நாம் பயன் பெறுமாறு செய்து விடுகிறார். மனதில் பதிவு செய்த எண்ணங்களை ஞாபகத்திற்குக்கொண்டு (னீமீனீஷீக்ஷீஹ் ஜீஷீஷ்மீக்ஷீ) வருவதற்குப் பெயர் சித்தம் என்று சாஸ்திரம் கூறுகிறது.

பல்வேறு எண்ணங்கள், சந்தேகப்படுதல், குழப்பம் அடைவது, போன்றவை மனம் ஆகும். நமது மனதில் ஒருபொருளைப்பற்றி அல்லது செயல்பாடுகள் பற்றி குழப்பமடையாமல் தெளிவுடன் முடிவு செய்வது புத்தி ஆகும். நமது எண்ணங்களில் செயல்பாடுகளில் ‘நான்’ என்ற எண்ணம் வருவதற்குப் பெயர் அகங்காரம். மனதில் பதிவு செய்த எண்ணங்களை ஞாபகத்திற்குக்கொண்டு வருவதற்கு பெயர் சித்தம் என்று சாஸ்திரம் கூறுகிறது.

சூக்ம பஞ்சபூதங்களில் ஒவ்வொரு பூதத்திலும் ரஜோ குணம் சேர்ந்து வரும்போது கர்மேந்திரியங்கள் தோற்றுவிக்கப்படுகிறது. அதாவது பஞ்ச’பூதங்களில் ஒன்றான ஆகாச பூத தத்துவத்தில் ரஜோ குணத்திலிருந்து

ஒரு இந்திரியம் தோன்றியது. அதேபோல் ஒவ்வொரு பூத தத்துவத்தில் உள்ள ரஜோ குணத்திலிருந்து ஒவ்வொரு இந்திரியம் தோன்றியது. அதாவது சூக்ம பஞ் சபூதங்களில் ஒவ்வொரு பூத தத்துவத்தில் ரஜோ குணத்துடன் வரும்போது ஐந்து கர்மேந்திரியங்கள் தனித்தனியாகத் தோன்றின என்று சாஸ்திரம் கூறுகிறது.

பஞ்சபூதங்களில் ஒன்றான ஆகாச தத்துவத்துடன் ரஜோ குணம் சேரும்போது பேசும் சக்தி வெளிபடுத்தப்படுகிறது. ஒருவருடைய வாய் மற்றும் நாவின் அமைப்பை வைத்து அவருக்குப் பேசும் சக்தி இருக்கிறது என்று கூறுவதற்கு முடியாது. எடுத்துக்காட்டாக ஒருவருக்கு வாய் நாக்கு போன்றவை பார்வைக்கு அழகாகத்தான் இருக்கிறது. ஆனால் அவர் பேசுவதற்கு முடியாத ஊமையாகக்கூட இருக்கலாம். சூக்ம பஞ்ச பூதங்களில் ஒன்றான ஆகாச தத்துவத்துடன் ரஜோ குணம் சேர்ந்து இருப்பதால்தான் நமக்குப் பேசும் சக்தி கிடைக்கிறது.

அதேபோல் சூக்ம பஞ்சபூதங்களில் ஒன்றான வாயு தத்துவத்தில் ரஜோ அம்சம் சேரும்போது கைகள் இயங்குவதற்கு சக்தி ஏற்படுகிறது. அதாவது நமது கைகள் மூலம் வேலை செய்வது, சாப்பிடுவது போன்ற அனைத்து செயல்பாடுகளுக்குத் தேவையான அல்லது இயங்குவதற்குத் தேவையான சக்திகள் கிடைக்கிறது. பஞ்சபூதங்களில் ஒன்றான நெருப்பு தத்துவத்தில் ரஜோ அம்சத்திலிருந்து கால்கள் இயங்குவதற்கு சக்தி தோன்றியது. அதாவது கால்கள் மூலம் நடப்பது, ஓடுவது, குதிப்பது, கால்களை மடக்கி உட்காருவது போன்ற செயல்பாடுகளுக்குத் தேவையான அல்லது இயங்குவதற்குத் தேவையான சக்தி கிடைக்கிறது.

சூக்ம பஞ்சபூதங்களில் ஒன்றான நீர் தத்துவத்தில் ரஜோ அம்சத்திலிருந்து உடலில் இருக்கும் எருவாய் மூலம் மலம் போன்ற கழிவுகள் வெளியேறுவதற்குரிய சக்தி கிடைக்கிறது. அதாவது மலம் போன்ற திடக்கழிவுகள் எருவாய் மூலம் வெளியேறு வதற்குரிய சக்தி கிடைக்கிறது. பஞ்ச பூதங்களில் ஒன்றான பிரிதிவி தத்துவத்தில் ரஜோ அம்சத்திலிருந்து உடலில் இருக்கும் சிறுநீர் போன்ற கழிவுகள் வெளியேறுவதற்குரிய சக்தி தோன்றியது. அதாவது சிறுநீர் போன்ற உடலில் ஏற்படும் திரவக் கழிவுகள் வெளியேறுவதற்குரிய சக்தி கிடைக்கிறது. இவையெல்லாம் நமது கண்ணுக்குத் தெரியாத கர்மேந்திரியங்கள் ஆகும். .

– அமைதி தொடரும்

**எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd) கைபேசி: 9894043308

● ஆன்மிகம் ● தத்துவம் ● உடல்நலம் ● பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்



# ஆசிரியர் குரு என்ன வித்தியாசம்?

# ஆசிரியர் கற்பிப்பார் ஞானி உபதேசிப்பார்

சீடன்: ஆஸ்திகன் செய்யும் தவறு என்ன?

ஞானி: ஆண் என்றால் இப்படி தான் இருக்கவேண்டும். பெண் என்றால் இப்படி தான் இருக்க வேண்டும் என்று சாஸ்திரத்தை சாட்சிக்கு அழைக்கும் ஆத்திகன், பக்தன் என்றால் இப்படி தான் இருக்க வேண்டும் என்றால் மட்டும், அதன்படி நடக்க மறுக்கிறானே, அது தான் தவறு.

சீடன்: அன்பு எப்பொழுது பொதுவாகிறது?

ஞானி: இறைவன் எல்லா உருவத்திலும் வரு வான் என்ற நம்பிக்கை வரும்போது.

சீடன்: கடவுளை அடையாளம் கண்டு கொள்ள முடியுமா?

ஞானி: உன் வீட்டிலேயே இரண்டு கைகளோ டோ அல்லது நான்கு கைகளோடோ சிவ பெருமான் வந்தால் பக்தி இல்லாததால் உன்னால் அவனை அடையாளம் கண்டு கொள்ள முடியாது.

சீடன்: பட்டினி இருந்து பூஜை செய்தால் விசே ஷமா?

ஞானி: பகவானையே நினைக்க முடியாத அளவுக்கு பட்டினி கிடக்கக் கூடாது.

சீடன்: உங்களால் எப்பொழுதும் எப்படி சிரிக்க முடிகிறது?

ஞானி: விட்டு விட்டு சிரிப்பது, விடாமல் சிரிப் பது என்ற இரண்டு வகை உண்டு. உலக வாழ்க்கையை விட்டு விட்டு சிரிப்பு "விட்டுட்டு" சிரிப்பது என்று எனது மூன்றாம் வகையாகும்.

சீடன்: ஏன் பூஜை முடிந்ததும் சுண் டல் தருகிறார்கள்?

ஞானி: சுண்டல் என்றாலே செய்து முடித்தது என்று பொருள், பூர்வ ஜென் மம் என்று அர்த்தம். பூர்வஜென்மத்தைப் பற்றி கவலைப்படாமல் தேவியை அணுகு. இந்த ஜென்மம் கடைதேறும்.



சீடன்: நவராத்திரி கொலு சொல்லும் விளக்கம் என்ன சுவாமி?

ஞானி: உலகக்கொலுவில் இந்தப் படியில் உட் கார்ந்திருப்பவன் இவன்.எப்படி இவனை மாற்ற வேண்டும் என்று எண்ணுகிறாள் தேவி. எப்படி மாற வேண்டுமென்று தெரிந்து கொள்கிறவன் யோகி. ஜீவராசிகள் அனைத்தும் களிமண்ணால் ஆன பொம்மை என்று தெரியும்போது ஆணவம் செத்து சித்திக் கிறது.

சீடன்: தேவி எப்படிப்பட்டவள்?

ஞானி: தெரியாததால் தான் ஞானிகளும், பக்தர்களுமே முதலில் பாவனையாக தான் எண்ணுவார்கள்.

சீடன்: திருமாலின் தங்கையான அம்பாள் ஏன் பெருமாள் கோயிலில் இல்லை?

ஞானி: நிச்சயம் இருந்திருப்பாள், உங்கள் சைவ வைஷ்ணவ சண்டையைக் கண்டு தான் பயந்து ஓடி இருப்பாள்.

சீடன்: தங்கள் கருத்துக்கள் சில சமயம் தீவிரமாக உள்ளதே?

ஞானி: அவைகளை மனிதன் ஞானத்துடன் தெளிவுடன் கேட்டால் தான் சரியாகப் புரியும்.

சீடன்: இறைவனை ஏன் வணங்க வேண்டும்?

ஞானி: பயத்தையும் அழித்து அதற்கான காரணங்களையும்அழிப்பவன் சிவன். அது ஒன்று போதாதா அவனைப் பக்தி செய்ய.

சீடன்: எது பாபமான நேரம்?

ஞானி: திறமையை வெளிப் படுத்த முடியாத சூழ்நிலை.

சீடன்: பக்தி எப்பொழுது வருகிறது?

ஞானி: செய்கைகளினால்.

சீடன்: மனிதன் தத்துவங்களை எப்பொழுது படைக்கிறான்?



ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன்
C.V. நடராஜன்
செல்: 9444228203
♦♦♦
முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994323622
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா
வேல் செல்
♦♦♦
வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.

ஆசிரியர் குழுவில் இணையலாம்

ஆன்மிகமலர்.காம் இதழில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்பு கொள்ளவும்
9444228203

ஞானி: பக்தி வரும்போது.

சீடன்: சாஸ்த்திரங்கள் எப்படி பிறந்தன?

ஞானி: மதங்கள் கடவுளை நம்புவதற்காக சாஸ்த்திரங்கள் படைத் தன.

சீடன்: கடவுளை நம்ப எது வேண்டும்?

ஞானி: அன்பு, படிப்பு இல்லாமல் நம்பிக்கை வராது.

சீடன்: மஹான்களை மனிதன் நம்புவது ஏன்?

ஞானி: ஆதாரம் உள்ளவர்கள் என்பதால்.

சீடன்: அதனால் அவர்களுக்கு என்ன பலன்?

ஞானி: ஆராய்ச்சி செய்து மேலே வளர பரிணாம வளர்ச்சி அடைய.

சீடன்: கடவுளை நினைத்துத்தான் ஆக வேண்டுமா?

ஞானி: பயமே வரவில்லை என்றால் நினைக்க வேண்டாம்.

சீடன்: அன்பு செய்யும் முதல் வேலை என்ன?

ஞானி: மனிதனை யோசிக்க ஊக்குவிக்கிறது.

சீடன்: எதை மறக்கக் கூடாது?

ஞானி: ஊக்குவிக்கின்ற சொற்களை.

சீடன்: பாசத்துக்கும் அன்புக்கும் என்ன வித்தியாசம்?

ஞானி: பாசம் அனுபவத்தைத் தரும். அன்பு இருக்கும் இடத்தில் அதற்கு இடமில்லை.

சீடன்: கண்ணுக்குத் தெரியாத கடவுளின்மீது அன்பு வைப்பது எப்படி?

ஞானி: அதற்குத்தான் பக்தி, காதல் என்று பெயர்.

சீடன்: அன்பின் இலக்கணம் என்ன?

ஞானி: அனுபவத்தை வென்றது அனுபவம் இல்லாதது.

சீடன்: தியாகத்தின் விளக்கம் என்ன சுவாமி?

ஞானி: உபயோகம் என்ற சொல்லில் மறைந்து கிடக்கும் உன்னத பணி.

சீடன்: ஆசிரியர் குரு என்ன வித்தியாசம்?

ஞானி: ஆசிரியர் கற்பிப்பார். ஞானி உபதேசிப்பார்.

சீடன்: ஒற்றுமை சமாதானம் எப்பொழுது வருகிறது?

ஞானி: மதம் அன்பாய் மனதிற்குள் போகும்போது.

சீடன்: சமயம் என்பது என்ன?

ஞானி: அன்பை பக்தியாக பிரச்சாரம் செய்வது.

சீடன்: சீடனுக்குத் தேவையான குணம் எது?

ஞானி: மன உறுதி.

ஞானச்சேரி ஞானிகள்
**பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்**
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
அழகுராஜா எஸ்.மகாதேவன், போன் 098410 28028





# சிவனை வணங்கிய பூனை விலங்குகளால் ஏற்படும் தோஷம் தீர்க்கும் ஸ்தலம்

சான்றோர் நிறைந்த தொண்டை மண்டலத்தில் அனேக புகழ்மிக்க சிவாலயங்கள்உள்ளன. அவற்றுள் பூனை பூஜித்த விசேஷ திருத்தலமும் உண்டு. கிராதமார்ஜாலபுரம் என்று அழைக்கப்பட்ட இப்பழம்பெறும் பதி இன்று "வில்லிப்பாக்கம்" என்று வழங்கப்பெறுகிறது. பூனையோடு வேடுவனும், கங்காதேவியும் மற்ற தேவர்களும் கூட இத்தலத்தில் வழிபாடு செய்துள்ளனர்.

உலகோரது பாவங்களைப் போக்கி, புண்ணியம் அளிக்கும் கங்காதேவி, ஒருசமயம் திருக் கயிலாயத்தில் கயிலாயநாதரை வணங்கி, "பகீரதனுக்காக என்னைப் பூவுலகில் பிரவாகிக்க கட்டளையிட்டீர். அதன்படியே காசி க்ஷேத்திரத்தில் நதி வடிவில் பாய்ந்து, என்னுள் மூழ்கி எழுவோருக்கெல்லாம் அவர்கள் செய்த பாவங்களைப் போக்கி, புண்ணியம் அளிக்கின்றேன். ஆனால் அவர்களின் பாவங்களை நான் ஏற்றுக் கொண்டு துன்புறுகின்றேன். அப்பாவங்களைக் களைந்திட அருள் புரிய வேண்டும்" என பிரார்த்திக்கின்றாள்.

அதற்கு சிவபெருமான்...."காஞ்சி மாநகரின் தென்கிழக்கு திசையில் ஐந்து காத தூரத்தில் ஒரு

திருக்குளமும், அதற்கு அருகே தான்தோன்றிய மகாலிங்கமும் இருக்கின்றது. அங்கு சென்று தீர்த்த நீராடி, அம்மஹாலிங்கத்தை பூஜித்து, உனது பாவங்களிலிருந்து விமோசனம் அடைவாய்" என அருள்மொழிந்தார். அதன்படி கங்கை இங்கு வந்து தாமரைகள் நிறைந்த புண்டரீக புஷ்கரணியில் நீராடி, இத்தல சிவலிங்கத்தை வழிபட்டு, பேரானந்தமும், பெருமகிழ்வும் அடைந்தாள். அதோடு, பாவங்கள் களைந்து, புண்ணியமும் பெற்றாள்.

முன்பொரு காலத்தில் ஹிமாச்சலத்தில் ஈசன் கிரிராஜன் குமாரியான மலைமகளை திருமணம் செய்யும்போது... அனைத்து தேவர்களும், ரிஷிகளும் ஏனைய அனைவரும் ஈசனது திருமண வைபவத்தை கண்டு, அருள் பெற்றிட இமயமலைக்கு வந்தனர். இதனால் இமயம் பாரம் தாங்காமல் அழுந்த... தென்புறம் மேல் எழும்பியது. இதன் காரணமாக உலகின் சகல ஜீவராசிகளும் பயமுற்றன. சிவனார் அகத்திய முனிவரை அழைத்து, தென்திசை சென்று பூமியின் பாரத்தை சமன்படுத்த கட்டளையிட்டார்.

பெருமான் இட்ட கட்டளையை ஏற்ற அகத்தியர், தனது கமண்டலத்தில் பாணலிங்கள் சிலவற்றை எடுத்துக் கொண்டு தென்திசை நோக்கிப் புறப்பட்டார்.

வழியில் சிவபூஜைக்குரிய காலத்தில் தனது கமண்டலத்தில் உள்ள பாணலிங்கங்களை ஆங்காங்கே பிரதிஷ்டை செய்து (நிறுவி) பூசனைப் புரிந்து வந்தார். காஞ்சிபுரத்தை அடைந்து, ஏகம்பனை வழிபட்டு, பின் திருக்கழுகுன்றம் வேதகிரீஸ்வரர் வழிபட்டார். அதைத் தொடர்ந்து தெற்கு நோக்கி நடந்தார். ஓர் வில்வவனத்தை அடைந்தார்.

அப்போது உச்சிவேளை வந்தது. சிவ பூஜைக்கு உரிய நேரம். தீர்த்தம் வேண்டி, சுற்றிலும் பார்த்தார். அங்கு வில்வக்காட்டில் ஒரு தடாகம் தென்பட்டது.

அதில் நீராடிவிட்டு, அங்கிருந்தக் கொன் றை மரத்தடிக்குச் சென்று பார்க்க... ஒரு தான்தோன்றி லிங்கத்தை கண்டார். அந்த லிங்கத்தைனேப் பூஜித்து மகிழ்ந்தார். தான் அங்கு வந்ததன் அடையாளமாக காசி விஸ்வநாதரையும் அருகில் பிரதிஷ்டை செய்தார் அகத்திய மாமுனிகள்.

தான் வழிபட்ட லிங்கம் அதுமுதல் அகத்தீஸ்வரர் என்று அழைக்கப்பட வேண்டும் என இறைவனிடம் பிரார்த்தனை செய்து, பிரியாவிடை பெற்றார் கும்பமுனி.

இந்த சரிதையை நாரதர் கூற, திருமால், பிரம்மா, தேவேந்திரன் மற்றும் சந்திரன் ஆகியோர் கேட்டறிந்தனர்.

கயிலாயத்தின் வாயில் காப்பாளராகத் திகழும் நந்திதேவருக்கு இரண்டு சீஷ்யர்கள் உண்டு. ஒருவன் காந்தன். மற்றொருவன் மகாகாந்தன். இவ்விருவரும் நந்திதேவரின் நித்திய சிவபூஜைக்குரிய திரவியங்களை சேகரித்துத் தருவது வழக்கம். அப்படி ஒருநாள் பூவுலகில் ஒரு தடாகக் கரையில் வெண் மந்தாரைச் செடிகள் இருப்பதைக் கண்டனர்.

உடன் அங்கு சென்று அந்த மந்தாரை மலர்களை இருவரும் பறித்தபோது, மலர்கள் தவறி நீரிலும், தடாகக் கரையிலும் விழுந்தன. கரையில் விழுந்த பூக்கள் கிளிகளாகவும், நீரில் விழுந்த பூக்கள் நீர்வாழ் இனங்களாகவும் மாறியது. இதை கண்டு வியந்து, மீண்டும் மீண்டும் மலர்களைப் பறித்து, நீரிலும் கரையிலும்








வீசி விளையாடினர்.

நந்திதேவர் தனது பூஜைக்கு புஷ்பம் இல்லாமல் போகவே கோபமுற்று, நேராக தனது சிஷ்யர்கள் இருக்கும் இடத்திற்கே வந்தார். சிஷ்யர்களில் ஒருவனான காந்தன் பூனைபோல் விழிப்பதையும், மகா காந்தன் பூப்பறிக்கும் துரட்டுக் கோலை ஏந்தி, விழித்துக்கொண்டு நிற்பதையும் கண்டு... காந்தனைப் பூனையாகவும், மகா காந்தனை வேடுவனாகவும் ஆகக்கடவது என சபித்தார்.

இருவரும் பயந்து, நடுங்கி நந்தியம்பெருமானை வணங்கி, மன்னிப்போடு, சாப விமோசனமும் வேண்டி நின்றனர்.

நந்திதேவர் மனமிரங்கி, சிஷ்யர்களிடம் "பூலோகத்தில் காஞ்சி மாநகருக்கு தென்கிழக்கு திசையில் ஐந்துகாத தூரத்தில் புண்டரீக புஷ்கரணி என்ற தீர்த்தமும், அகத்தியர் வழிபட்ட அகத்தீஸ்வர லிங்கமும் உள்ளது. அங்கு சென்று ஒருவரை ஒருவர் அறியாமல் தீர்த்தத்தில் நீராடி, அகத்திய லிங்கத்தைப் பூஜித்து, அங்கு சிறிது காலம் தங்க வேண்டும். அப்போது சிவலிங்கத்தின் சமீபத்தில் ஒரே காலத்தில் நீங்கள் இருவரும் சந்திக்கும்பொழுது உங்கள் சாபம் நீங்கும்" என்று அருள் புரிந்தார்.



மோ.கணேஷ்

அதன்படி இருவரும் பூவுலகில் பூனையும், வேடுவனுமாகத் தோன்றி, தீர்த்த நீராடி, ஒருவரை ஒருவர் அறியாமல் அகத்தீசரை பூஜித்து வந்தார்கள். ஒரு நாள் பொழுது விடியும் முன்னமே ஸ்நானம் செய்து, சிவபூஜை செய்து கொண்டிருந்தான். அச்சமயம் வேடுவனான மகாகாந்தன் நீராடிவிட்டு, புஷ்பங்களோடு சிவலிங்கத்தின் அருகில் வந்தபோது, பூனை இருப்பதைக் கண்டு, கோபமுற்று, வில்லை வளைத்து பூனையை நோக்கி அம்பை விடுத்தான்.

வேடன் தொடுத்த அம்பு பூனை மேல் படாமல் சிவ லிங்கத்தின் மீதுபட்டு இரத்தம் பீறிட்டது.இதைக் கண்ணுற்ற வேடுவனும், பூனையும் உடன் சுய உருவத்தை அடைந்தனர்.

நடுக்கமுற்ற இருவரும், சிவ பெருமானிடம் மன்னிப்புக் கேட்டு, ரக்ஷிக்க வேண்டினர். ஈசனும் திருவருள் புரிந்தார்.

அதுமுதற்கொண்டு இத்தல ஈசர் கிராதமார்ஜாலீஸ்வரர் [கிராதன் = வேடுவன் மார்ஜாலம் = பூனை] என அழைக்கப்பெற்றார். இப்பதி

"கிராதமார்ஜாலபுரம்" என வழங்கப்பெற்றது. இத்தலத்தின் புராண உண்மைகள் யாவும் கல்வெட்டின் வாயிலாக கிடைக்கப் பெற்றவை யாகும்.

மேலும், திருமால், பிரம்மா, இந்திரன், சந்திரன் ஆகியோரும் இத்தலப் பெருமானைப் பூஜித்து பேறு பெற்றுள்ளனர்.

சாலையை ஒட்டியே ஆலயம் பிரம்மாண்டமாக அமையப்பெற்றுள்ளது. தெற்கு நோக்கிய தோரணவாயில். அதனுள் நுழைந்திட... நேராக வாகனக் கொட்டடியும், கல்யாண மண்டபமும் அமைந்துள்ளன. பிறகு கிழக்கு நோக்கியவாறு இறைவன் சந்நிதி. முன்னே பலிபீடம், கொடிமரம் மற்றும் நந்திதேவர். அடுத்ததாக 32 கால் மண்டபம், அழகிய சிற்பங்கள் கொண்டு, அழகூட்டுகின்றன. எதிர்புறம் தென்முகம் கொண்ட அம்பிகை சன்னதி ஒரு சுற்றுடன் உள்ளது. கருவறையுள் அழகிய வடிவில் அருள்பாலிக்கின்றாள் அன்னை ஸ்ரீ முத்தாம்பிகை. வடமொழியில் ஸ்ரீ மௌக்திகாம்பாள் என்று அழைக்கப்படுகிறாள்.

32 கால் மண்டபம் கடந்து நேராக செல்ல... மகா மண்டபம், அர்த்த மண்டபம், கருவறை என்கிற அமைப்பில் ஸ்வாமி சந்நிதி அமைந்துள்ளன. மூலஸ்தானத்தில் ஸ்ரீ கிராதமார்ஜாலீஸ்வரர் சுயம்பு வடிவாய் எழுந்தருள்பாலிக்கின்றார். அகத்தீஸ்வரர் என்றும் போற்றப்படுகின்றார்.

இரண்டு பிராகாரங்கள் கொண்ட இவ்வால யத்தின் உள் பிராகாரத்தை வலம் வருகின்றோம். முதலில் சப்தமாதர்கள் கணபதியுடன் குடிகொண் டுள்ளனர். கணபதி, தட்சிணாமூர்த்தி என கோஷ்ட மாடங்களில் கலையெழில் மிகுந்த தெய்வ சிலைகளைக் கண்ணுறுகின்றோம். தட்சிணாமூர்த்திக்கு அருகில் சிவனின் 64 ரூபங்களில் ஒன்றான ஏகபாதமூர்த்தியின் சிற்பம் கருவறை வெளிச்சுவரில் அற்புதமாகப் புடைக்கப்பட்டுள்ளது.

தென்மேற்கு தல கணபதி தனியேசன்னிதி கொண்டுள்ளார். அடுத்தபடியாக மேற்குத் திருமாளிகை பத்தியில் இத்தல சிவனை பூஜிக்கும்படியாக கங்கையும், எதிரில் வேடுவ னும், சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளனர். அருகே பூனையும் உள்ளது. இவர்களுக்கு முன்னே சிவலிங்கமும், அம்பிகை சிலையும் உள்ளன.

அடுத்ததாக ஸ்ரீ காசி விஸ்வநாதர் அன்னை விசாலாட்சியுடன் கோவில் கொண்டுள்ளார். துர்க்கை இங்கு ஆறு கரங்களைக் கொண்டு ஷட்கர துர்க்கையாக எழில் கொஞ்சுகின்றாள். கந்தனும் இங்கு தனியே சந்நிதி கொண்டு அருள் புரிகின்றார்.

அமைதியும், தூய்மையும் ஒருங்கே பெற்ற கோவில். இங்கு ஆத்ம சுகம் கிடைப்பது உறுதி.

கருவறைச் சுவர்களில் சோழர்காலபழந்தமிழ்க் கல்வெட்டுகள் ஏராளமாய் காணப்படுகின்றது. புராணப் பெருமை மிகுந்த இத்தலம் தேவாரத் தில் இடம் பெற்றிருக்கக்கூடும் என்பது தமிழறி ஞர்களின் கூற்றாகும்.

இவ்வாலயத்தில் இரண்டு விசேஷங்கள் உண்டு. இக்கோவிலில் எப்போதும் இருந்து கொண்டே இருக்கும். தினமும் இறைவனுக்கு படைத்த {நிவேதித்த} சாதத்தை அப்பூனை உண்பதற்கு வைக்கின்றார் அர்ச்சகர் இரத்தின சபாபதி குருக்கள்.

அதுபோல் இன்றும் இக்கோவிலை சுத்தம்







செய்பவர்கள் வேடுவர் குலத்தைச் சேர்ந்தவர் என்பது வியப்புக்குரியதாகும்.

இங்கு இரண்டாம் கரிகாலச் சோழனால் திருப்பணிகள் பல செய்யப்பட்டுள்ளது.

சூனாம்பேடு ஜமீன் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் இவ்வாலயத்தை நிர்வகித்து வருகின்றனர்.

12 ஆண்டுகளுக்கு ஒருமுறை சூனாம்பேடு ஜமீன் வழிவந்தவர்களால் திருப்பணி செய்து, குடமுழுக்கு விமர்சையாக நடத்தப்பட்டு வருகின்றது.

தல தீர்த்தமாக புண்டரீக புஷ்கரணியும், தல விருக்ஷமாக சரக்கொன்றையும் திகழ்கின்றன. அனேக சிவாலய விசேடங்களும் இங்கு சிறப்புற அனுசரிக்கப்படுகின்றன. ஆண்டுதோறும் மாசி மகத்தன்று சுவாமி திருவீதியுலாவும், சமுத்திரத்தில் தீர்த்தவாரியும் நடைபெறுகின்றது.






தினசரி இரண்டு கால பூஜைகள் நடத்தப் படுகின்றன. தினமும் காலை 7 மணி முதல் 11 மணி வரையும், மாலை 5 மணி முதல் 7.30 மணி வரையும் ஆலய நடை திறந்திருக்கும்.

முற்பிறவிச் சாபங்களை எல்லாம் களைந்திடும் இப்பெருமானை அகத்தியச்சித்தர் வழிபட்டதால், தீராத நோய்களையும் தீர்த்து வைக்க வல்லவர் ஆவார். மாங்கல்ய பலம் கூட்டி, தீர்க்கசுமங்கலியாக வாழ வைப்பவள் இத்தல நாயகி. வாய்ப் பேச முடியாத விலங்குகளால் ஏற்படும் தோஷங்களைத் தீர்த்து வைத்திடும் தலம் 'வில்லிப்பாக்கம்' என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

சென்னை புதுச்சேரி கிழக்குக்கடற்கரைச் சாலையில் கடப்பாக்கத்திற்கு அடுத்து வரும் வெண்ணங்குபட்டில் இருந்து சூனாம் பேடு செல்லும் சாலையில் 6 கிலோ மீட்டர் தூரத்தில் சூனாம்பேட்டிற்கு முன்பு வில்லிப் பாக்கம் அமைந்துள்ளது. மதுராந்தகம், செய்யூர், மரக்காணம், மேல்மருவத்தூர் ஆகிய இடங்களி லிருந்து சூனாம்பேடு வர பேருந்து வசதியுள்ளது.

– பழங்காமூர் மோ.கணேஷ்.

தொடர்பு எண்: 9789156179





# நொய்டாவில் வைகாசி விசாக விழா கோலாகலம்

வைகாசி விசாகத்தை முன்னிட்டு, வேதப் பிரச்சாரகர் சன்ஸ்தான் (விபிஎஸ்) நிர்வாகம், இந்த நிகழ்வைக் குறிக்கும் வகையில் பிரமாண்டமான மூன்று நாள் விழாவை ஏற்பாடு செய்திருந்தது.

வைகாசி விசாகத் திருநாளில் ஸ்ரீகார்த்தி கேயருக்கு சிறப்பு அபிஷேகம், பலவிதமான மலர்களால் ஆராதனைகள் செய்யப்பட்டு, வழக்கமான அபிஷேகப் பொருட்கள் அனைத்தும் பயன்படுத்தப்பட்டன.

வந்திருந்த பக்தர்கள் ஸ்ரீ கந்த சஷ்டி கவசம் ஓதினர், அதுமட்டுமின்றி, ஸ்ரீ கார்த்திகேயரின் பக்தி பாடல்களை பாடி, 'வெற்றி வேல் முருகனுக்கு ஹரோ ஹரா' என கோஷமிட்டனர். மேலும், 'முருக கோஷம்' 108 முறை பாடப்பட்டது. மகா தீபாராதனையுடன் நிகழ்ச்சி நிறைவடைந்து, அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.

ஆறு படை முருகன் கோவில்களில் சிறப்பு அபிஷேகங்கள் நடப்பது போலவே நடத்தியதற்கு பக்தர்கள் எல்லோரும் 'விபிஎஸ்' உறுப்பினர்களை மட்டும் கோவிலின் வாத்தியார்கள்: மணிகண்டன் சர்மா, மோஹித் சர்மாவையும் பாராட்டினர்.

இரண்டாம் நாள் காலை கலச பூஜையுடன் நிகழ்ச்சி தொடங்கியது. இதைத் தொடர்ந்து, வேதமந்திரம் முழக்கங்களுக்கு மத்தியில், மக்களை எதிரிகளிட மிருந்து பாதுகாக்கவும், அவர்களை எதிர்கொள்ளும் தைரியத்தையும் / வலிமையையும் தருவதற்காக, கார்த்திகேய பகவானுக்கு அர்ப்பணிக்கப்பட்ட சிறப்பு 'சத்ரு சம்ஹார ஹோமம்' நடைபெற்றது.

வியாபாரத்தில் ஏற்படும் தொடர் நஷ்டம், கடன்கள் போன்ற அனைத்து பிரச்சனைகளையும் தீர்த்து செல்வத்தை தக்கவைக்க உதவுகிறது. உள்ளுக்குள் இருக்கும் பேராசை,





எஸ்.வெங்கடேசன்

பொறாமை, காமம், பயம் போன்ற எதிரிகளை வெல்ல சித்தாந்த ரீதியாக பக்தர்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நாராயணன், சிந்தாமணி மற்றும் புஷ்பேந்தர் என்ற வாத்தியார் குழுவினரால் இந்த ஹோமம் சிறப்பாக செய்யப்பட்டது.

மூன்றாம் நாளான ஜூன் 4ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை பக்தர்கள் காவடி எடுத்து கோயில் வளாகத்திற்குள் சென்றனர். கோயில் நிர்வாகத்தினர் லட்சார்ச்சனைக்கு ஏற்பாடு செய்திருந்தனர், இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர், அதைத் தொடர்ந்து ஸ்ரீகார்த்திகேயருக்கு சிறப்பு அபிஷேகம் நடந்தது. மகா தீபாராதனையுடன் நாட்கள் நிகழ்ச்சி நிறைவடைந்தது, மேலும் இந்த சிறப்பு விழாவில், 1000 க்கும் மேற்பட்டவர்களுக்கு 'அன்னதானம்' வழங்கப்பட்டது.

'திருப்புகழ் அன்பர்கள்', 'திருப்புகழ்' இசை வழிபாடு'. VPS நிர்வாகம் 'திருப்புகழ்' குழுவை கவுரவித்தது. இதில், நொய்டாவின் பல்வேறு பகுதிகள் மட்டுமின்றி, சுற்றுவட்டார பகுதிகளில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர். மகா ஆரத்தியுடன் நிகழ்ச்சி நிறைவடைந்தது.

**– எஸ்.வெங்கடேசன், நொய்டா**
**தொடர்பு எண்: 9811161370**



# இக்காலத்திற்கு உதவும்

# விதுரர் கூறிய 6 உபதேசங்கள்

விதுரர் தொடர்ந்து, உறங்காமல் தவிக்கும் திருதராஷ்டிரனுக்கு மேலும் உபதேசிக்கிறார். இந்த உபதேசம் இப்போதும் நமக்கு உபயோக முள்ளதாக உள்ளது.

❖❖❖

**1. உயர்நிலைக்கும் செல்வத்திற்கும் ஆசைபடுபவர்கள் இந்த ஆறையும் விட்டுவிட வேண்டும்.**

● அதிக நித்திரை ● மயக்கம் அல்லது மந்தம் ● பயம் ● கோபம் ● சோம்பல் ● எந்த காரியத்தையும் முடிக்காமல் நீட்டிக்கொண்டே செல்லுதல்.

❖❖❖

**2. இந்த ஆறு பேரின் நட்பை எப்படி ஓட்டை உள்ள படகிலிருந்து உடனே தப்பித்துக் கொள்ள நினைப்போமோ அவ்வாறு உடனடியாக விட்டு விட வேண்டும்.**

- எல்லாம் தெரிந்திருந்தும் எதையும் கற்றுக் கொடுக்காத ஆச்சார்யன்/ குரு
- வேதத்தை கற்றுக்கொள்ளாமல் யக்கியம் செய்ய வருபவர்
- இன்சொல் பேசாத மனைவி
- ரட்சிக்கவேண்டிய ஆட்கள் இருந்தும், நம்மை காக்காமல் தூங்கிகொண்டிருக்கும் ராஜா
- வீட்டை விட்டு வெளியே செய்யும் தொழிலை, வீட்டுக்குள்ளேயே செய்ய நினைக்கும் சோம்பேறி.
- காட்டுக்குச் சென்று தவம் செய்ய நினைக்கும்

நாவிதன்.

❖❖❖

### 3. எந்த காரணத்தை கொண்டும் இந்த ஆறை எப்போதும் விட்டு விடக்கூடாது

- சத்யம்
- தானம்
- சோம்பலின்மை
- பொறாமை படாமல் இருத்தல்
- பொறுமை
- தைரியம்

❖❖❖

### 4. இந்த ஆறும் ஜீவ லோகத்தில் எப்போதும் சுகமே தரும்.

- தின பண வரவு
- எப்போதும் ஆரோக்கியம்
- பிரியமான மனைவி
- பிரியமாக பேசும் மனைவி
- நம் சொல் கேட்கும், நமது வசத்தில்உள்ள பிள்ளை
- நாம் படித்திருப்பதற்கு தகுந்தாற்போல்நல்ல சம்பாத்தியம் கொடுக்கும் வேலை.

❖❖❖

### 5. இந்த ஆறையும் ஜெயித்தே தீர வேண்டும்.

- காமம்
- கோபம்
- பேராசை
- கர்வம்
- பொறாமை
- மயக்கம்

❖❖❖

### 6. இந்த ஆறு வகைபட்டவரும் பிறரை நம்பி வாழ்பவர்கள்

- திருடர்கள் (முட்டாளை நம்பி)
- வைத்தியர்கள் (வியாதி பிடித்தவர்களை நம்பி)
- வேசிகள் (காம வசப்பட்ட ஆண்களைநம்பி)
- யக்கியம் செய்யும் பிராமணர்கள் (எஜமானரை நம்பி)
- ராஜா (சண்டை செய்யும் வீரர்களை நம்பி)
- பண்டிதர்கள் (புத்தி இல்லாதவர்களைநம்பி)

❖❖❖

### 7. கீழ்க் கண்டவற்றை முகூர்த்தம் தவறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

- பசு
- மனைவி (எப்போதும் பரிவுடன் நடத்த வேண்டும்)
- சேவகன் (சேவகன் எஜமானரின் இசைவுக்கு ஏற்ப எப்போதுமே நடந்து கொள்ள வேண்டும்)
- நெற்பயிர்
- கல்வி (தொடர்ந்து படித்துக் கொண்டே இருக்க வேண்டும்)
- நம்மை விட தாழ்ந்தவர்கள் (இவர்கள் எப்போது காலை வாரி விடுவார்கள் என்று தெரியாது)

❖❖❖

### 8. இந்த ஆறு பேருக்கும் நன்றி காட்ட மாட்டார்கள்

- கற்ற பின் ஆசார்யன், குரு
- திருமணம் ஆனவுடன் தாய்
- காம இச்சைக்குப் பிறகு பெண்
- வேலையை முடித்துவிட்ட வேலை ஆள்
- ஆற்றை கடந்த பின் ஓடம்
- வைத்தியம் முடிந்தவுடன் வைத்தியர்.

❖❖❖

இவ்வாறு விதுரர் நீதியில் திருதராஷ்டிரனுக்கு நீதி உபதேசிக்கப் பட்டுள்ளது. அடுத்து விதுரர் என்ன சொன்னார் என்று அடுத்த அத்தியாத்தில் காண்போம்.

ஆன்மிகம் தத்துவம் உடல்நலம் பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்







பாரம்பரியமான,
சத்தான, சுவையான
சமையல் குறிப்புகளை
மிக எளிமையாகவும்,
தெளிவாகவும் அறிந்து கொள்ள

**கீதாசமையல்**

(geetha samayal)

youtube சேனலை பாருங்கள்




geetha samayal வீடியோவை பார்த்து
Like, Share, Subscrib செய்யுங்கள்

# தியான யோகத்தின் மூலம் அண்ட சராசர ஆராய்ச்சியில் ஈடுபட்ட சித்தர்கள், வள்ளலார்

மனித மனம் என்பது எப்போதும் குழம்பிக் கொண்டே இருக்கும் குட்டையைப் போன்றது.

இதனால்தான் அதை பலரும் ரசிக்க முடியாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

எப்போது குழப்பங்கள் நீங்கி மனம் தெளிவு அடைகிறதோ... அப்போது தெளிந்த நீரோடையாகவும், அனைத்தையும் ரசிக்கும் மனப்பக்குவத்திற்கு மனிதன் வந்துவிடுவான், இந்த குழப்பத்தை தெளிவு படுத்துவதற்கு கேள்விகள் மட்டுமே உதவி செய்யும் என்பது குருவுக்கு நன்கு தெரியும், அதனால்தான் சீடனிடம் கேள்வி கேட்க பல குருமார்கள் அக் காலத்தில் நிர்பந்தித்தனர்.

தற்காலத்தில் கேள்வி பதிலை தானே தயாரித்து அதை தனது சீடர்களுக்கு கொடுக்கும் குருமார்கள்தான் பல்வேறு இடங்களில் பல்கி பெருகி உள்ளனர்.

இதனால் சரியான தெளிவு கிடைக்காமல் சீடர்கள் தவிப்பதுடன் சீடனுக்கு சரியான வழி முறையில் கற்பிக்க முடியாமல் குருமார்களும் தவித்து வருகின்றனர்.

இந்து மதத்தில் மட்டுமே, கேள்வி தொடுத்து, பதிலால் தங்கள் மனம் தெளிவு அடைந்து, மகா ஞானியாகவும் மகா சித்தனாகவும் முடியும் என்பதை பல்வேறு சம்பவங்களின் மூலம் வெளிப்படையாக அறிய முடிகிறது.

பிரம்மச்சரியம் பெரியதா, குடும்ப உறவு பெரியதா? குடும்ப உறவை விட பிரம்மச்சரியத்தில் அதீத இன்பத்தை அடைய முடியுமா?

என்ற கேள்வி பல்வேறு கால கட்டங்களில் பலரால் எழுப்பப்பட்டு வந்தது, ஆனால் அதற்கு பல்வேறு கருத்துக்கள் பதிலாக வந்தாலும், ஒருசிலருக்கு மட்டுமே தெளிவு பிறந்தது, மற்றவர்களுக்கு குழப்பம் நீடித்துக் கொண்டே இருந்தது.

அதைப்போன்று ஆண் தெய்வம், பெண் தெய்வம் சரி அர்த்தநாரி என்ற இரு கலப்பு தெய்வம் தேவையா? அந்த தெய்வத்தின் மூலம் உலகிற்கு என்ன செய்தியை நமது முன்னோர் கூறுகின்றனர் என்ற குழப்பம் ஒருசிலருக்கு வந்து கொண்டிருந்தது.

இதுபோன்ற குழப்பங்களை மனதில் வைத்துக் கொண்டு இறைவனை வணங்கினாலும், எந்தப் பலனும் கிடையாது. முதலில் குழப்பத்திற்கு விடையை காண முற்பட வேண்டும்.

இந்த வகையில் விடையை தேடி அலைந்து திரியும் போதுதான் வெளிவராத கேள்விக் கெல்லாம் விடை தானாகவே கிடைத்து விடும், இன்னும் ஒருசில மகான்களின் அறிவுரைகள் முழுவதும் ஆராய்ந்து பார்த்தாலும் சிறிய விடைகள் நம் மனதை தெளிவு படுத்திவிடும்.

ஒரு கால கட்டத்தில் இளைஞர்கள், இளைஞிகளின் கேள்விக்கு விடைகொடுத்து பல இளம் தலைமுறையினரை ஆன்மிகத்தில் சுண்டி இழுக்க வைத்தவர்தான் ஓஷோ.

இவர் பிரம்மச்சரியம் மற்றும் அர்த்தநாரீஸ்வரர் போன்றவற்றிற்கு அற்புதமான விளக்கங்களை கொடுத்துள்ளார்.

அதைப்பற்றி சிறிய அளவில் பார்ப்போம்...

"சரியாக சொல்லவேண்டுமானால் குடும்பத்தை விட பிரம்மச்சரியம் உயர்ந்தது, மேலும்

aanmeegamalar.com

குடும்பஸ்தனைவிட சுத்தமான பிரம்மச் சரியத்தை கடைபிடிப்பவர்கள் அதீத இன்பத்தை தன்னுள் அனுபவிப்பதாக ஓஷோ அவர்கள் கூறியுள்ளார்.

இதை ஒருமுறை படித்து பாருங்கள் ஒருசிலவற்றிற்கு விடை கிடைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

நீங்கள் முழு ஆண் என்றால் உன் தந்தையிடம் இருந்து பிறந்திருக்க வேண்டும்

நீங்கள் முழு பெண் என்றால் உன் தந்தையின் பங்களிப்பு இல்லாமல் பிறந்திருக்கவேண்டும்

நீங்கள் ஆண் பெண் கலவை ..

இதனால்தான் விஞ்ஞானத்தால் பாலினமாற்றம் சாத்தியமாயிற்று

நீங்கள் ஆண் என்றால் உனக்குள் வெளிப்படாத பெண் உண்டு

நீங்கள் பெண் என்றால் உனக்குள் வெளிப்படாத ஆண் உண்டு

இது சிறிய ஹார்மோன் வேறுபாடுதான்

தந்ரா உனக்குள் இருக்கும் பெண்ணுடன் எப்படி இணைவது என்பதையும்

**மனதை திறப்போம் மாயையை அழிப்போம்**

அதற்கு வெளியே உள்ள ஒரு பெண்ணை எப்படி ஊடகமாகப்பயன்படுத்துவது என்பதையும் சொல்வது

இந்த இணைப்பு நிரந்தரமானது

இந்த உள் இணைப்பு தொடங்கி விட்டால்

பிறகு வெளியே உள்ள பெண்மீது கவர்ச்சி இருக்காது

இதுதான்

பிரம்மச்சர்யம்

ஒவ்வொரு நொடியும் உச்சம்தான்.....

இந்த நிலையில் பிரிவே கிடையாது .....

பிரிக்கவே முடியாது

முடிவே கிடையாது

முடிக்கவே முடியாத பேரின்பம்

இதுதான் மோனம்

இதுதான் சமாதி

இதுதான் ஞானம்

இதுதான் முக்தி

இதுதான் கடவுள்





இப்போது உனது பாலுணர்வு ஆற்றல் வெளி யேறி விரையமாவதில்லை உள்ளுக்குள்ளே உயர் கிறது இப்போது நீ அர்த்தநாரி" என்று ஓஷோ கூறுகிறார்.

இதுநாள்வரை அர்த்தநாரியை வணங்கியிருப் போம் ஆராய்ந்திருக்க மாட்டோம். ஆனால் அர்த்தநாரியைப் பற்றிய தெளிவு கிடைத்ததும், வழிபாட்டில் இன்னும் கூடுதல் உந்துதல் ஏற்படு கிறது.

இதைப்போன்றுதான் ஒவ்வொரு காரண காரி யங்களை ஆராய்ந்து பார்த்தால் இந்து மதத்தில் ஒவ்வொரு செயலும் ஒவ்வொரு உந்துதலை ஏற் படுத்தும்.

இந்த ஒரு காரணத்திற்காகத்தான் இன்று இந்தியாவைத் தேடி பல லட்சக்கணக்கான வெளிநாட்டவர்கள் வருகின்றனர்.

உலக வாழ்க்கை என்பது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மேல் திகட்டிவிடும், அந்த திகட் டலை போக்க ஒவ்வொரு மனிதனும் நாடிவருவது ஆன்மிகத்தைத்தான், இவ்வாறு ஆன்மிகத்தை நாடிவருவதில் பெரும்பாலானோர் ஆண்டு அனுபவித்து அதில் வெறுமை உள்ளது என்பதை உணர்ந்த பின்பே ஆன்மிகத்தை நாடுபவர்களாக இருக்கின்றனர்.

இதனால் இவர்களால் ஒரு குறிப்பிட்ட நிலைக்கு மேல் செல்ல முடியாமல் தவிப்பார்கள்.

இந்த தவிப்பில் சிக்காமல் இருப்பதற்கு நாம் தியானம், யோகத்தை கடைபிடித்தால் கேள்வியை கேட்டு அலையும் மனதை அடக்கி, அந்த மனதிற்கு தெளிவை கொடுத்து உலக வாழ்க்கையிலிருந்து ஒட்டியும் ஒட்டாமலும், அதே நேரத்தில் உலக கடமைகளை வெற்றியுடன் செய்தும் முடிக்கவும் முடியும்.

தியானம் செய்வதால் இரண்டு முக்கியமான பலன்கள் உண்டாகின்றன.

1. நமது மன அழுத்தம் நமது உடலில் சேர்ந்து விடாமல் காக்கின்றது.

2. நமது உடலில் சேர்ந்திருக்கும் அழுத்தத் தினை விடுவிக்கின்றது.

இரண்டுமே ஒரே நேரத்தில் நிகழ்வதால் நமக்குள் ஒரு புத்துணர்ச்சி ஏற்படும். இந்த புத்துணர்ச்சி பெருக பெருக உலக விஷயங்களின் மீது ஒரு நாட்டம் மறையும்.

தொடர் தியானத்தில் ஈடுபடும்போது மனம் சாந்தம் அடையும், மனதில் அமைதிகூடும், மகிழ்ச்சி பெருகும், நல்ல உடல்நிலைகிடைக்கும், ஆற்றலின் அளவு அதிகரிக்கும், நேர்மறையான உறவுகள் வாழ்வில் நிறைவை உண்டாக்கும்.

தியானம் ஒரு கட்டத்திற்கு மேலே செல்ல செல்ல, இவ்வுலக வாழ்க்கையின் போக்கிலிருந்து மாறி அண்ட சராசரங்களை ஆராயும் ஆற்றல் பெருகும், இந்த அண்ட சராசரங்களை ஆராயும் ஆற்றல் கிடைக்க உடலுக்கு வலிமையும் தேவைப் படும் என்பதால், தியானத்துடன் யோகத்தையும் பயில வேண்டும் என்று நமது முன்னோர்கள் தங்களது சீடர்களுக்கு வழிமுறைகளாக கூறினர்.

அண்டசராசரங்களை ஆராயும் ஆற்றல் கிடைத்துவிட்டால், பூலோக வழிபாட்டு முறைகளி லிருந்து, மாறுபட்ட வழிபாட்டு முறைக்கு செல்ல துவங்கிவிடுவார்கள். இதற்கு உதாரணமாக வள்ளலார் போன்ற மகான்களை குறிப்பிடலாம்.

வள்ளலார் போன்ற மகான்கள் இறைநிலையை







மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர்
மெயில் புத்தகம்”
aanmeegamalar.com
இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு
செய்தும் படிக்கலாம்

அடையும் முன்புவரை பூலோக வழிபாட்டு முறையான சிலை வழிபாட்டை கடைபிடித்தனர். குறிப்பாக வள்ளலார் முருகன் மீது தீவிர பக்தராகவும், கலியுகத்தில் முருகனின் நேர சீடனாகவும் திகழ்ந்தவர், திருபொருட்பா போன்ற பொக்கிஷத்தை உலகத்திற்கு தரும் அளவிற்கு உயர்ந்து நின்றவர்.

இவரின் தியான யோக பலனால் அண்டசராசர ஆய்வில் தனது மனதை செலுத்தியபின்பு ஜோதி ஒன்றையே குறிக்கோளாக ஏற்று ஜோதியில் கலந்தார்.

ஆனால் நாம் எடுத்தவுடன் வள்ளலாரின் கடைசி நிலையை கடைபிடிக்க முற்பட்டால் தோல்விதான் மிஞ்சும், முதலில் நாம் நமது மனதையும், உடலையும் கட்டுப்படுத்தும் வித்தையையும், யோகத்தையும் அவசியம் கற்க வேண்டும்.

இந்த தியான யோகத்தில் கை தேர்ந்தவர்கள் நமது சித்தர்கள்தான், இந்த தியான யோகத்தை பயன்படுத்தித்தான் அவர்கள் ஒரே சமயத்தில் பல்வேறு இடங்களில் காட்சி கொடுத்தனர்.

இந்த தியான யோகத்தை பயன்படுத்தித்தான் மக்கள் நோய், பேய்களை விரட்டினர்.

www.aanmeegamalar.com

இவ்வளவு சிறப்பு வாய்ந்த தியான யோகத்தை நாம் பயன்படுத்தாமல், நமது சந்ததியினருக்கு சொல்லிக் கொடுக்காமல் வளர்ப்பதால்தான் தற்போது சிறு வயதிலேயே பல்வேறு உடல் பிரச்சனைகள், மனப் பிரச்சனைகள் ஏற்படுகிறது.

சிறு வயதில் இதய செயலிழப்பு, மனச் சிதறல், மகிழ்ச்சி என்ற பெயரில் தீய செயல்களில் ஈடுபடுதல் போன்றவை நமது சந்ததியினரை ஆட்டிப்படைக்கும் அரக்கனாக மாறி வதைத்து வருகிறது.

இக்காலத்தில் நமது சந்ததியினருக்கு தியானம் யோகத்தை அவசியம் கற்றுத் தருவோம், இதனால் நமது சந்ததியினருக்கு கிடைக்கும் பலன்கள்...

பதட்டம் குறைகிறது

உணர்ச்சி திடம் கூடுகின்றது

படைப்பாற்றல் அதிகரிக்கின்றது

ஆனந்தம் கூடுகின்றது

உள்ளுணர்வு வளர்கின்றது

மனத் தெளிவு மற்றும் மன அமைதி கிடைக்கின்றது

பிரச்சினைகள் சிறிதாகத் தெரிகின்றன

மனம் கூர்மைப் பட்டு, கவனம் கூடி, இளைப்பாறல் மூலம் விரிவடைகின்றது.

(விரிவடையாதபோது கூர்மையான மன இறுக்கம், கோபம் மற்றும் விரக்தியைஉண்டாகும், கூர்மையற்ற விரிவடைந்த மனம் செயலின்மையை, முன்னேற்றமின்மையை ஏற்படுத்தும்.).

இவ்விரண்டும் சரி சம விகிதத்தில் இருந்தாலே நிறைவானது ஏற்படும்.

உங்கள் உள்மனமே உங்கள் மகிழ்ச்சியினை நிர்ணயிக்கும் என்னும் அறிதலை தியானம் அளிக்கின்றது.

யோகம் உடலினை பலப்படுத்துகிறது, எதையும் தாங்கும் வலிமையை கொடுக்கிறது.

நமது பாரதத்தின் உன்னத கலையான தியான யோகத்தை அவசியம் நமது சந்ததிக்கு கொடுத்து அவர்கள் வாழ்க்கையில் ஒளியேற்ற ஒவ்வொரு பெற்றோரும் அவசியம் முன்வரவேண்டும்.

பாதையைதேடி.
போன்: 9444228203

Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.
Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.
Website: www.aanmeegamalar.com / E-mail: aanmeegamalar@gmail.com

# விருப்ப சந்தா செலுத்த










விருப்ப
**சந்தா**

**UPI மற்றும் வங்கி**
**வாயிலாகவும்**
**சந்தா செலுத்துங்கள்...**

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

BHIM Baroda Pay

SCAN TO PAY
WITH ANY BHIM UPI APP
Merchant Name : AANMEEGA MALAR TRUST

UPI

**AANMEEGA MALAR TRUST**
**ACCOUNT NO. 49510100003648**
**IFSC CODE: BARB0KODAMB**
**(FIFTH CHARACTER IS ZORO)**
**BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)**